10917

# ஆத்திசூடி அறநெறிக் கதைகள்




நா. மகேசன்

170
மகேச
SL/PR

# ஆத்திசூடி அறநெறிக் கதைகள்

நா. மங்கசன்

செ. தனபாலசிங்கன் நினைவு வெளியீடு

*கிடைக்குமிடம்:*


59, மூர் வீதி, கொழும்பு-6.

உரிமைப் பதிவு]

[விலை ரூபா—3/50

1978

உ
சிவமயம்



# சமர்ப்பணம்

உரும்பராயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்
கொழும்பில் உதவித் தொழில் ஆணையாளராகக்
கடமையாற்றியவருமாகிய, எனதினிய நண்பர்
**அமரர் செ. தனபாலசிங்கன் அவர்கட்கு.**

கந்தன் திருவடியைக் கணமும் மறவாதே
காலமெலாஞ் செந்தமிழின் காதல் நினைவோடே
சிந்தை சிவநெறிக்குஞ் செல்வந் தமிழுக்கும்
சீர்வரிசை செய்ததனாற் செம்மை நலமோர்ந்தே
முந்தைப் பனுவலிடை மூழ்கிப் பொருளாய்ந்தே
முத்தனைய நூல்பலவும் மூவாத் தமிழுக்கே
தந்த பெருவளத்தான் தனபால சிங்கன்தாள்
தன்னிலிட்டே னர்ப்பணமாய் தயவா யிதுநூலே!

அச்சுப்பதிவு: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம் - நாவலப்பிட்டி (இலங்கை)

பண்டிதர், சைவப் புலவர், சிவத்தமிழ்ச்செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பது யாவராலும் போற்றப்படும் வாசகம். இதற்கேற்ப இளம் உள்ளங்களில் சிறந்த கருத்துக்களைப் பதிய வைப்பது பெருமக்கள் கடனாகும். ஔவையின் வாக்கு அமுத வாக்கு என்பதை அகத்திற் கொண்ட திரு. நா. மகேசன் அவர்கள் சிறுகதைகள் மூலம் கருத்தைப் பதிக்கும் சக்தியுடையவர். கதை கேட்பது என்றால் பாலர் முதல் பாட்டி ஈறாக எல்லோருக்கும் விருப்பமானதே. ஆனால் கதைகள் சருக்கரை போலவும், கருத்துக்கள் ஔடதங்கள் போலவும் அமைய வேண்டும். இத்தகைய சிறப்புடனேயே புராணங்கள் வெளிவந்தன. உண்மைப் பொருள் நுட்பமானது. அந்த நுட்பத்தை மனத்திலே பதிய வைக்கப் புனைந்துரைகளான கதைகளே மிகச் சிறந்தன.

ஆத்திசூடி தந்த ஔவையைத் தமிழுலகம் என்றும் நினைவு கூர்ந்து போற்றுகிறது. அந்த நினைவு இளம் உள்ளங்களிலும் என்றும் நிலைக்க வைத்து விட்டார் திரு. நா. மகேசன் அவர்கள். அருமையான படைப்பு. சின்னஞ்சிறிய கதை. ஆனால் பென்னம்பெரிய உண்மை. இதுவே நவீன காலத்துக்கு ஏற்புடைத்தாகும். நம் நாட்டுக் கலாசாரம் குன்றாதபடி நல்ல கருத்துக்களுடன் அமைந்த இக் கற்பனையூற்றுகளைப் போற்றுவோம்.

இன்று ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, நன்னெறி ஆகியவற்றை மனனம் செய்யும் பழக்கம் குன்றிவிட்டது. மனனம் செய்தவர்களும் அந்தக் காலத்தில் கருத்துணர்ந்து மனனம் செய்யவில்லை. இக்குறைபாடுகளைப் போக்கக் கூடியதான ஒரு சிறந்த படைப்பு 'ஆத்திசூடி அறநெறிக் கதைகள்' என்றால் அதில் மிகையொன்றுமில்லை. இக் கதைகளின் மூலம் அறத்தின் பெருமையையும், கொடையின் மகிமையையும், முயற்சியின் வலிமையையும் சிறப்பாகப் பதிய வைக்கிறார் ஆசிரியர். பொதுவாகச் சொற்சுருக்கமும், கருத்தாழமும், பொருள் தெளிவும் மிக்க இப்படைப்பினை எல்லோரும் போற்றி ஏற்றுப் பயின்று நற்பயன் பெறுவார்களாக என்று வாழ்த்துகிறேன்.

துர்க்காதேவி ஆலயம்
தெல்லிப்பளை.
4-10-78.

—செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

# முன்னுரை

ஈழவள நாட்டிலே, இன்று சிறுவர் இலக்கியங்களுக்கு உள்ள தட்டுப்பாட்டை நாம் அறிவோம். நாவலர் பெருமானும், நவாலியூர் சோமசுந்தரப் புலவரும் சிறுவர் இலக்கியங்கள் படைத்துத் தந்த காலம் போய் விட்டது. தமிழ் நாட்டின் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை, குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா முதலிய பெரியோர் தமிழ்ச் சிருருக்குத் தந்த நூல்களும் நம் நாட்டிற் கிடைப்பது அரிதாகிவிட்டது.

இந்நிலையில் நம் நாட்டின் சிறுவர்களுக்கு இயன்ற அளவிற் தரமான நூல்களை ஆக்கித் தரவேண்டும் என்ற ஆவல் எனக்கு உண்டாயிற்று. எனவே இதுவரை சில சிறுவர் நூல்களை வெளியிட்டேன். இலாபம் என் நோக்கமல்ல. தனியொருவன் இவ்வகைப் பணியை மேற்கொள்வது சிரமத்திற் சிரமம்.

"ஆத்திசூடி அறநெறிக் கதைகள்" என்னும் இந்நூலை வெளியிட எனக்கு ஆக்கந் தருபவர்கள் அமரர் திரு. செ. தனபாலசிங்கன் ஞாபகார்த்தக் குழுவினர். இது அன்பர் தனபாலசிங்கனுடைய நினைவு வெளியீடாக உங்கள் முன் வருகிறது. சைவசமய நூல்கள் பலவற்றை எழுதித் தனி ஒருவராக நின்று வெளியிட்டுத் தமிழுக்கும் சைவத்துக்கும் பெருந் தொண்டாற்றியவர் அமரர் தனபாலசிங்கன் அவர்கள்.

அன்னார் இவ்வுலகில் இல்லாத போதும் அவரது பெயரால் என்போன்றூர் ஊக்குவிக்கப்படுவது பெருந்



தொண்டேயாம். அவர் விட்டுச் சென்ற பணி தொடர்வதற்கு ஓர் அரிய வழியேயாம். இக்குழுவினருக்கு என் நன்றி உரித்தாகுக.

இந்நூலில் ஔவையாரின் ஆத்திசூடி வாக்கியங்களை விளக்குகின்ற இருபத்தொரு கதைகள் உண்டு. இவற்றிற் பதினொரு கதைகள் வீரகேசரி வாரஇதழில் வெளி வந்தவை. இக்கதைகள் சிறுவரின் அறிவை வளர்ப்பதோடு தற்காலத்தில் அவர்கள் கண்களில் இலகுவிற் படாத ஆத்திசூடியையும் அவர்களுக்கு அறிமுகப்படுத்தும் என்பது எனது நம்பிக்கை.

நூலுக்கான படங்களை வரைந்து தந்தவர் எனதரிய நண்பர் "சௌ" அவர்கள். நூலை உருவாக்க உந்து சக்தியாயிருந்தவர் எனதினிய நண்பர் திரு. மு. சிவராசா அவர்கள். இவர்களுக்கு என் நன்றி. மேலும் நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கும், மதிப்புரைகள் தந்து ஊக்குவித்த அருட்திரு. சா. ம. செல்வரட்னம் அடிகளாருக்கும், கலாநிதி அல்ஹாஜ் எம். எம். உவைஸ் அவர்களுக்கும், என் முன்னும் பின்னும் திரிந்து இவ்வாக்கத்தை முடுக்கிவிட்ட நண்பர் திரு. ச. நவரத்தினம் அவர்கட்கும், வீரகேசரித் தாபனத்தாருக்கும், ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தாருக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

*59, மூர்வீதி,*
*கொழும்பு–6.*
*10–11–1978.*

நா. மகேசன்

# ஔவையார் அருளிச் செய்த ஆத்திசூடி

## கடவுள் வாழ்த்து

ஆத்தி சூடி யமர்ந்த தேவனை
ஏத்தி யேத்தித் தொழுவோ மியாமே.

### நூல்

1. அறஞ்செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண்ணெழுத் திகழேல்.
8. ஏற்ப திகழ்ச்சி.
9. ஐய மிட்டுண்.
10. ஒப்புர வொழுகு;
11. ஓதுவ தொழியேல்;
12. ஔவியம் பேசேல்.
13. அஃகஞ் சுருக்கேல்.
14. கண்டொன்று சொல்லேல்.
15. ஙப்போல் வளை.
16. சனி நீராடு.
17. ஞயம்பட வுரை.
18. இடம்பட வீடெடேல்.
19. இணக்கமறிந் திணங்கு;
20. தந்தைதாய் பேண்.
21. நன்றி மறவேல்;
22. பருவத்தே பயிர்செய்.
23. மண்பறித் துண்ணேல்;
24. இயல்பலா தனசெயேல்;
25. அரவ மாட்டேல்.
26. இலவம் பஞ்சிற் றுயில்.
27. வஞ்சகம் பேசேல்.
28. அழகலாதன செயேல்.
29. இளமையிற் கல்.
30. அறனை மறவேல்.
31. அனந்த லாடேல்.
32. கடிவது மற.
33. காப்பது விரதம்;
34. கிழமைப் படவாழ்.
35. கீழ்மை யகற்று.
36. குணமது கைவிடேல்;
37. கூடிப் பிரியேல்;
38. கெடுப்ப தொழி.
39. கேள்வி முயல்.
40. கைவினை கரவேல்.
41. கொள்ளை விரும்பேல்.
42. கோதாட் டொழி;
43. சக்கர நெறிநில்.
44. சான்றோ ரினத்திரு.



45. சித்திரம் பேசேல்;
46. சீர்மை மறவேல்.
47. சுளிக்கச் சொல்லேல்;
48. சூது விரும்பேல்;
49. செய்வன திருந்தச்செய்.
50. சேரிட மறிந்துசேர்;
51. சையெனத் திரியேல்;
52. சொற்சோர்வு படேல்;
53. சோம்பித் திரியேல்;
54. தக்கோ னெனத்திரி;
55. தானமது விரும்பு.
56. திருமாலுக் கடிமைசெய்;
57. தீவினை யகற்று.
58. துன்பத்திற் கிடங்கொடேல்.
59. தூக்கி வினைசெய்.
60. தெய்வ மிகழேல்.
61. தேசத்தோ டொத்துவாழ்.
62. தையல்சொற் கேளேல்.
63. தொன்மை மறவேல்.
64. தோற்பன தொடரேல்;
65. நன்மை கடைப்பிடி.
66. நாடொப்பன செய்.
67. நிலையிற் பிரியேல்.
68. நீர்விளை யாடேல்.
69. நுண்மை நுகரேல்.
70. நூல்பல கல்.
71. நெற்பயிர் விளை.
72. நேர்பட வொழுகு.
73. நைவினை நணுகேல்.
74. நொய்ய வுரையேல்;
75. நோய்க் கிடங் கொடேல்;
76. பழிப்பன பகரேல்;
77. பாம்பொடு பழகேல்.
78. பிழைபடச் சொல்லேல்;
79. பீடு பெறநில்;
80. புகழ்ந்தாரைப் போற்றிவாழ்.
81. பூமி திருத்தியுண்.
82. பெரியாரைத் துணைக்கொள்;
83. பேதைமை யகற்று.
84. பையலோ டிணங்கேல்;
85. பொருள்தனைப் போற்றிவாழ்.
86. போர்த்தொழில் புரியேல்;
87. மனந்தடு மாறேல்.
88. மாற்றானுக் கிடங்கொடேல்.
89. மிகைபடச் சொல்லேல்;
90. மீதூண் விரும்பேல்.
91. முனைமுகத்து நில்லேல்;
92. மூர்க்கரோ டிணங்கேல்;
93. மெல்லினல்லாள் தோள்சேர்.
94. மேன்மக்கள் சொற்கேள்.
95. மைவிழியார் மனையகல்;
96. மொழிவ தறமொழி.
97. மோகத்தை முனி.
98. வல்லமை பேசேல்;
99. வாதுமுற் கூறேல்.
100. வித்தை விரும்பு.
101. வீடு பெறநில்;
102. உத்தம னாயிரு.
103. ஊருடன் கூடிவாழ்.
104. வெட்டெனப் பேசேல்;
105. வேண்டி வினைசெயேல்;
106. வைகறைத் துயிலெழு;
107. ஒன்னாரைத் தேறேல்.
108. ஓரஞ் சொல்லேல்;

ஆத்திசூடி மூலம் முற்றிற்று.

# பொருளடக்கம்


| | கதை | ஆத்திசூடி | பக்கம் |
|---|---|---|---|
| 1. | சுமைதாங்கி | அறஞ்செய விரும்பு | 1 |
| 2. | ஒட்டு மாங்கன்று | ஆறுவது சினம் | 4 |
| 3. | பறந்தது கோழி | இயல்வது கரவேல் | 7 |
| 4. | பலாப்பழம் | ஈவது விலக்கேல் | 10 |
| 5. | இசைக் கச்சேரி | உடையது விளம்பேல் | 13 |
| 6. | வெகுமதி | ஊக்கமது கைவிடேல் | 16 |
| 7. | நன்னான்கு பதினாறு நாலும் நாலும் எட்டு | எண்ணெழுத் திகழேல் | 20 |
| 8. | புல்லுச் சத்தகம் | ஏற்ப திகழ்ச்சி | 24 |
| 9. | நல்ல பாடம் | ஐய மிட்டுண் | 27 |
| 10. | குண்டு வீச்சு | ஒப்புர வொழுகு | 30 |
| 11. | என் கதை | ஓதுவ தொழியேல் | 33 |
| 12. | மாறாட்டம் | ஔவியம் பேசேல் | 36 |
| 13. | விதை நெல் | அஃகஞ் சுருக்கேல் | 40 |
| 14. | கிளிக் குஞ்சு | கண்டொன்று சொல்லேல் | 43 |
| 15. | மக்கள் தொழிற்சாலை | ஙப்போல் வளை | 47 |
| 16. | இயந்திரக் கலப்பை | சனி நீராடு | 49 |
| 17. | தீப்பெட்டி | ஞயம்பட உரை | 52 |
| 18. | வாடகைக்காரர் | இடம்பட வீடெடேல் | 56 |
| 19. | தொலைந்த முதல் | இணக்கமறிந் திணங்கு | 59 |
| 20. | கெட்ட குமாரன் | தந்தைதாய் பேண் | 63 |
| 21. | முடிச்சு மாறிகள் | நன்றி மறவேல் | 66 |


# சுமைதாங்கி

வில்லூர் என்பது ஒரு சிறு கிராமம். அங்குள்ள மக்கள் விவசாயஞ் செய்து தமது வாழ்க்கையை நடத்தினர். வில்லூரில் உற்பத்தியாகும் விளைபொருட்களை அங்குள்ள மக்கள், மென்னுகம் என்னும் ஊரில் உள்ள பெரிய சந்தைக்குக் கொண்டு சென்று விற்பர். மென்னுகம் வில்லூரில் இருந்து ஆறு மைல் தொலைவில் இருந்தது. மென்னுகச் சந்தையில் பல ஊர்களிலும் இருந்து வியாபாரிகள் வந்து பொருட்களை வாங்குவர். மென்னுகச் சந்தையைச் சூழ்ந்த பிரதேசம் ஒரு பட்டினம்போல் காட்சியளித்தது.


வில்லூர் மக்கள் மென்னுகம் சந்தைக்குப் பொருட்களை வண்டிகளிலும் தலைச் சுமையாகவும் கொண்டு செல்வர். அநேகமான வறியவர்களிடம் மாட்டு வண்டிகள் கிடையாது. ஆகவே அவர்கள் தலைச் சுமையாகவே பொருட்களைச் சந்தைக்குக் கொண்டு செல்வர். அதிகாலையில் எழுந்து மக்கள் தலைச் சுமைகளுடன் தெருவிலே நடந்து செல்வது அன்றாடம் காட்சியாக இருக்கும். பலருக்கு ஆறு மைல்களையும் பாரமான தலைச்சுமையுடன் நடந்து செல்வது பெரும் களைப்பாக இருக்கும். சந்தை கூடுமுன்பே போய்விட வேண்டும் என்பதற்காகப் பலர் ஓட்டமும் நடையுமாகச் செல்வர்.

இப்படிச் செல்லும் மக்கள் நடு வழியிலே களைத்து விட்டால் தமது சுமைகளை இறக்கிவைத்துச் சிறிது களை ஆறிப்போக விரும்புவர். ஆனால் எல்லோரும் தலைச் சுமைகளோடு போவதாலும், வேறு வழிப்போக்கர்கள் அதிகம் இல்லாமையாலும் தமது சுமைகளை இறக்கிவைக்க வசதியில்லாமல் அவதிப்படுவர். இந்த அவதியைத் தீர்ப்பதற்காக அந்த வழியில், ஓர் இடத்தில் ஒரு சுமைதாங்கியைக் கட்ட வேண்டும் என்று வில்லூர் மக்களிற் சிலர் தீர்மானித்தனர். சுமை தாங்கி தெரு ஓரத்தில் இருந்தால் அதன்மேல் தலைச் சுமைகளைப் பிறருடைய உதவி இல்லாமல் இறக்கிவைக்கலாம். பின்னர் களை ஆறிவிட்டுப் பிறருடைய உதவி இல்லாமலே மெதுவாகத் தலையில் ஏற்றிக்கொண்டு செல்லலாம். இந்த ஒழுங்கு எத்தனையோ மனிதருக்குப் பெரும் உதவியாகவும், ஆறுதலாகவும் இருக்கும்.

சுமை தாங்கி கட்டுவதற்குப் பணம் வேண்டுமே. வில்லூர் மக்கள் தமது கிராமத்தில் உள்ளவர்களிடம் பணம் திரட்டினார்கள். அதிகமானோர் தம்மால் இயன்ற உதவியைச் செய்தனர். அவ்வூரில் புண்ணியமூர்த்தி என்று ஒரு பணக்காரன் இருந்தான். அவன் வியாபாரஞ் செய்து வாழ்ந்தான். சுமைதாங்கி கட்டுவதற்கு மக்கள் அவனிடமும் பணம் கேட்டனர். அவனோ ''நான் உங்கள் சுமைதாங்கியை உபயோகிக்கப் போவதில்லை. எனக்கு எதற்குச் சுமைதாங்கி'' என்று சிறிதும் தர்ம சிந்தையில்லாமல் மறுத்துவிட்டான். மக்கள் ஏதோவிதமாக வேண்டிய பணத்தைத் திரட்டிச் சுமைதாங்கியைக் கட்டி முடித்தனர். பலரும் அந்தச் சுமைதாங்கியை உபயோகித்துக் களைப் பாறிக் கொண்டனர்.

வருடங்கள் பல சென்றன. புண்ணியமூர்த்தியின் வியாபாரம் நட்டம் அடையலாயிற்று. அவனிடமிருந்த பணம், பொருள் எல்லாம் கடனுக்காக அறவிடப்பட்டன. புண்ணியமூர்த்தி எதற்கும் வழியில்லாத வறியவனானான்.





தன்னுடைய சீவியத்தைக் கொண்டு செல்ல அவன் கூலி வேலை செய்யும் நிலையை அடைந்தான். ஒருநாள் அவன் கூலிக்குப் பொருள் சுமக்க வேண்டியிருந்தது. பெரிய ஒரு சுமையைத் தலையிலே சுமந்துகொண்டு மென்னுகம் சந்தையில் கொடுக்க வேண்டும். அப்படி அவன் சுமந்து செல்கையில் நன்றாகக் களைத்து விட்டான். தலை நெரிவது போல் இருந்தது. சுமையை இறக்கிக் கீழே வைக்க ஒருவரும் வரமாட்டார்களா என்று ஏங்கினான். அந்த வேளை தெருவிலே ஒருவரும் போகவில்லை. புண்ணிய மூர்த்தி செய்வது அறியாது தவித்தான். அப்போது தெரு ஓரமாக இருந்த சுமைதாங்கி அவன் கண்களிலே பட்டது. மிகுந்த ஆவலோடு அதனருகே சென்று தன் தலைச் சுமையை மெதுவாக இறக்கிவைத்தான் புண்ணிய மூர்த்தி. ''அப்பனே ஆண்டவா'' என்று ஒரு பெருமூச்சு விட்டான். அவனுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது.

புண்ணியமூர்த்தியின் கண்கள் சுமைதாங்கியிற் பொறிக்கப்பட்டிருந்த எழுத்துக்களைப் பார்த்தன. அதிலே "அறஞ்செய விரும்பு'' என்று எழுதப்பட்டிருந்தது. புண்ணியமூர்த்தியின் கண்கள் கலங்கின. ''இந்தச் சுமை தாங்கியைக் கட்டுவதற்கு என்னிடமும் பணம் கேட்டார்களே, நான் இது எனக்கு உதவாது என்று மறுத்து விட்டேனே. எனக்கு இல்லாவிட்டாலும் மற்றவர்களுக்கு உதவுமே என்ற நல்ல எண்ணம் இல்லாது இருந்தேனே, நான் பாவி, இனிமேலாவது நல்ல தருமமான காரியங்களைச் செய்ய நான் பின்னிற்கக் கூடாது'' என்று தனக்குள்ளே கூறிக்கொண்டான்.

''அறஞ்செய விரும்பு''

# ஒட்டு மாங்கன்று


கணபதி தன் வீட்டு வளவிலே எத்தனையோ ஒட்டு மாங்கன்றுகளை நட்டுப் பார்த்தான். ஒன்றுகூட நன்றாக வளரவில்லை. எல்லாம் காய்ப்பதற்கு முன்பே பட்டுப் போயின. கடைசியாக மிகவும் சிரமப்பட்டு, நல்ல கவனம் எடுத்து, ஒரு ஒட்டு மாங்கன்றை நட்டான். அது மிகவும் செழித்து வளர்ந்தது. அதைப் பார்க்கும்போது கணபதிக்குப் பெரும் மகிழ்ச்சியாக இருந்தது. "இந்த மாமரம் காய்த்தால் முதல் முறை காய்க்கும் பழங்கள் அத்தனையையும் விற்று, கிடைக்கும் பணத்திற் பாதியைக் கோயில் உண்டியலிலே சேர்த்துவிடுவேன்" என்று எண்ணினான் கணபதி.

சில காலஞ் செல்ல, அந்த ஒட்டு மாமரம் பூத்தது. கணபதிக்கு ஒரே உற்சாகம். ஆனால் அத்தனை பூக்களும் காயாகவில்லை. இரண்டே இரண்டு பிஞ்சுகள் மட்டுந் தான் தோன்றின. இருந்தாலும் கணபதிக்குத் தன் மாங் கன்று காய்த்து விட்டதே என்று பெரும் மகிழ்ச்சி. நிலத்தில் நின்று கையால் எட்டிப் பிடுங்கக் கூடியதாக அந்த மாம்பிஞ்சுகள் தொங்கின. அந்த மாங்காய்களைத் தொடக்கூடாது என்று தன் மனைவி மக்களுக்குக் கட்டளை யிட்டிருந்தான் கணபதி. அவற்றை யாராவது பிடுங்கிக் கொண்டு போய்விடாதபடி கவனிக்கும்படியும் சொல்லி வைத்தான்.



கணபதியின் வீட்டுக்கு எதிர்த்தாற்போல் வேலுவின் வீடு இருந்தது. வேலுவுக்குப் பாண்டி என்று ஒரு மகன் இருந்தான். பாண்டி துடியாட்டமான பையன். அவனுக் குக் கணபதியின் ஒட்டு மாங்காய்களிலே ஒரு கண். எப்படி யாவது அந்த மாங்காய்களை யாரும் காணாமல் பிடுங்கித் தின்ன வேண்டும் என்பது அவன் ஆவல். ஒருநாள் யாரும் இல்லாத நேரம் பாண்டி பதுங்கிப், பதுங்கிக் கணபதியின் வளவுக்குள் நுழைந்தான். "லபக்" என்று இரண்டு மாங் காய்களையும் பறித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தான். பாண்டி ஓடுவதை, அடுக்களையில் இருந்து வெளியே வந்த கணபதியின் மனைவி கண்டுவிட்டாள். "டேய் நில்லடா பாண்டி" என்று சத்தம் போட்டுக் கொண்டு துரத்திச் சென்றாள். பாண்டி பயத்தால் நடுங்கினான். மாங்காய் களைப் போட்டுவிட்டு ஓடி மறைந்துவிட்டான்.

எங்கோ சென்றிருந்த கணபதி வீட்டுக்கு வந்தான். நடந்த செய்தி அறிந்ததும் பாண்டியையும், அவனுடைய பெற்றோரையும் திட்டிக் கொட்டினான். "பாண்டியின் காலை அடித்து முறிப்பேன்" என்று சத்தமிட்டான். வேலு வீட்டுக்கு வெளியே வந்து "இரண்டு மாங்காய்ப் பிஞ்சுக ளுக்காக ஏன் இப்படித் திட்டித் தொலைக்கிறாய்" என்றான். கணபதிக்கு அடக்க முடியாத கோபம் வந்தது. "டேய் உன் போக்கிரிப் பிள்ளையைச் சரியாகவள" என்று கத்தினான். "சரியாக வளர்க்கா விட்டால் என்னடா செய்வாய்" என்றான் வேலு.



பொங்கிவந்த கோபத்தைக் கணபதியாற் கட்டுப்படுத்த முடியவில்லை. "இதுதான் செய்வேனடா" என்று சொல்லிக்கொண்டு கையிலே வைத்திருந்த பொல்லால் வேலுவின் தலையிலே ஓங்கி அடித்தான். வேலு "ஐயோ" என்று அலறிக்கொண்டு கீழே விழுந்தான். மண்டை உடைந்து இரத்தம் பாய்ந்தது. கணபதிக்குக் கைகால் பதறின. வேலுவின் மனைவியும் குழந்தைகளும் "ஐயோ ஐயோ" என்று அலறினர். சனம் கூடிவிட்டது. சிலர் வேலுவைத் தூக்கி மோட்டார் வண்டியிலே ஏற்றிக் கொண்டு வைத்தியசாலைக்கு விரைந்தனர்.

பொலிசார் வருவார்களே, தன்மேல் வழக்குத் தொடர்வார்களே, என்று கணபதி பயந்து நடுங்கினான். அற்ப விடயத்துக்கு வீணாகக் கோபித்துக் கொண்டேனே என்று ஏங்கினான். அவன் நினைத்தது போல் வழக்குத் தொடரப் பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி நடந்தவற்றை நன்கு விசாரித்துத் தெரிந்து கொண்டார். கணபதி கோபத்தை அடக்காத படியால் ஏற்பட்ட விபரீதம் என்று உணர்ந்தார். கணபதியைப் பார்த்து "நீ ஆத்திசூடி படிக்கவில்லையா" என்று கேட்டார். கணபதி "இல்லைப் பிரபு" என்று தலை அசைத்தான். "ஆறுவது சினம்" அதாவது கோபத்தை அடக்கு, என்று ஔவையார் கூறியிருக்கிறார். நீ அதைப் படிக்கவில்லை. ஆகையினால் கோபத்தை அடக்காமல் வேலுவைக் காயப்படுத்தி விட்டாய். அது குற்றம். அந்தக் குற்றத்துக்கு நீ தண்டனை அனுபவிக்க வேண்டும். உனக்கு இரண்டு மாதம் சிறைவாசம் விதிக்கிறேன்" என்று அமைதியாகக் கூறினார் நீதிபதி.

கணபதி, கோபத்தை அடக்காத படியால் சிறைக்குப் போகவேண்டி வந்ததே என்று மனம் வருந்தினான்.

"ஆறுவது சினம்"

# பறந்தது கோழி

கண்ணனுக்கு மூன்று வயதுதான் இருக்கும். அவன் தினமும் காலையில் எழுந்தவுடன் ஒரு கோப்பை பால் பருகுவான். பின்னர் மத்தியானம்வரை அவனுக்கு எந்த விதமான சாப்பாடும் தேவை இல்லை. காலையிற் பாலைக் குடித்துவிட்டு அவன் தன்பாட்டிலே விளையாடிக் கொண்டிருப்பான். கண்ணன் வீட்டுக்குத் தினமும் ஒரு பாற்காரன் நல்ல பசுப் பாலைக் கொண்டுவந்து கொடுத்தான். அவன் வராமல் நின்ற நாளே கிடையாது.

அன்று ஒரு நாள் பாற்காரனுக்குப் பால் கொண்டுவர முடியவில்லை. அவன் கண்ணனின் வீட்டுக்கு வந்து "அம்மா இன்றைக்குக் கன்று பால் முழுவதையும் ஊட்டி விட்டது. பால் இல்லை" என்று சொல்லி விட்டுப் போய்விட்டான். கண்ணனின் அம்மா பூமணி, என்ன செய்யலாம் என்று யோசித்தாள். பால் இல்லாவிட்டால் கண்ணன் அழுவானே என்று ஏங்கினாள். இதற்கிடையில் கண்ணனும் விழித்துக் கொண்டான். எழுந்து வந்து கண்களைக் கசக்கியபடி "அம்மா பால்" என்றான். "இன்றைக்குப் பால்இல்லையடா இராசா. பிள்ளைக்குக் கொத்தமல்லித் தண்ணீர் தருகிறேன் குடியடா என்செல்வம்" என்றாள் பூமணி. கண்ணன் பால்தான் வேண்டும் என்று அடம் பிடித்து அழுதான்.

பூமணி வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் மனோன்மணி வசித்து வந்தாள். மனோன்மணி வீட்டில் ஒரு பசுமாடு நின்றது. அது கன்று ஈன்றிருந்தபடியால் அதன் பாலைக் கறந்து மனோன்மணி தன் மக்களுக்குக் கொடுத்து வந்தாள். அன்றும் மனோன்மணி தன் பசுவிற் பாலைக் கறந்து, காய்ச்சித் தன்மக்களுக்குக் கொடுத்துவிட்டு மீதியாக இருந்த பாலை அடுக்களையில் மூடிவைத்திருந்தாள். மனோன்மணியின் மூத்த மகன், அழகன். அவனுக்குப் பத்து வயதிருக்கும். அவன் பாலை அதிகம் விரும்பிக் குடிப்பதில்லை. அதனாற்தான் பால் மிஞ்சியிருந்தது.

சின்னக் கண்ணன் அழுவதைப் பொறுக்கமாட்டாத பூமணி "மனோன்மணி அக்காவிடம் கொஞ்சப் பால் கேட்டுப் பார்ப்போம்" என்று சொல்லி, கையில் ஒரு கோப்பையை எடுத்துக் கொண்டு மனோன்மணி வீட்டுக்கு வந்தாள். மனோன்மணி, வீட்டு விறாந்தையில் நின்றாள். "அக்கா இன்றைக்குப் பாற்காரன் பால்கொண்டு வரவில்லை. கண்ணன் பால் வேண்டும் என்று அழுகிறான். ஒரு கோப்பை பால் இருந்தால் தாருங்கள் அக்கா" என்று மிகுந்த நயமாகக் கேட்டாள் பூமணி.

மனோன்மணிக்கு, முன்பே பூமணியில் பொறாமையாக இருந்தது. பூமணி ஒருகுறையும் இல்லாமல் வாழ்வது மனோன்மணிக்குப் பிடிக்கவில்லை. எனவே "இவளுக்கு ஏன் பால் கொடுக்கவேண்டும்" என்று தனக்குள்ளே எண்ணினாள். "ஐயோ தங்கச்சி கொஞ்சம் முன்புதான் பாலைக் காய்ச்சிப் பிள்ளைகளுக்குக் கொடுத்தேன். இவன் அழகன் ஒரு சொட்டும் விடாமல் குடித்துவிட்டான். நீ கொஞ்சம் முந்தியே வந்திருக்கக் கூடாதா" என்று அன்பொழுகக் கூறினாள்.

அப்போது அழகன் அங்கே வந்தான். தாய்சொல்லும் பொய்யைக் கேட்கும்போது அவனுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. "மாமி பால் நிறைய இருக்கு அம்மா பொய் சொல்கிறா" என்று சொல்லிவிடலாமோ என்று தோன்றியது. ஆனால் ஏதோ நினைத்துப் பேசாமல்



இருந்துவிட்டான். பால் இல்லை என்று சொன்னதைக் கேட்டபூமணி ஏமாற்றத்தோடு வீடு திரும்பினாள்.



பூமணி சென்றதும், மனோன்மணி அடுக்களையை நோக்கி நடந்தாள். "மீதியாய் இருக்கும் பாலை வைத்திருக்கக் கூடாது. நானேகுடித்துவிடுவோம்" என்று நினைத்துக்கொண்டு அடுக்களைக் கதவைத் திறந்தாள். அப்போது ஒரு கோழி அடுக்களைக்குள் நுழைந்தது. கோழி நுழைவதைக் கண்ட மனோன்மணி அதை வெளியே துரத்த முற்பட்டாள். அப்போது கோழி அங்கும் இங்கும் பறந்தடித்தது. அப்படிப் பறக்கும்போது சட்டியில் மூடி வைக்கப்பட்டிருந்த பாலைத்தட்டி ஊற்றிவிட்டு வெளியே சென்றது.

மனோன்மணிக்குக் கோழிமேல் கோபங்கோபமாக வந்தது. "பறந்துபோன கோழி" என்று சொல்லிக் கொண்டு கவிழ்ந்து கிடந்த பாற்சட்டியை எடுத்து நிமிர்த்தினாள். அப்போது, அழகன் அங்கே வந்தான். அவனுக்குச் சிரிப்புச் சிரிப்பாக வந்தது. "இயல்வது கரவேல், இயல்வது கரவேல்" என்று சொல்லிக்கொண்டு தன் கைகளைத் தட்டினான்.

மனோன்மணியின் உள்ளத்தில் ஊசியாற் குத்துவது போல் இருந்தது. "பாவம் குழந்தை கண்ணனுக்குப் பால் கொடுக்கக் கூடியதாக இருந்தும், அதைக் கொடுக்காமல் மறைத்தேன். இப்போது அந்தப் பால் ஒருவருக்கும் பிரயோசனப் படாமல் போய்விட்டது. செய்யக்கூடியதைச் செய்யாமல் விடுவது எவ்வளவு தவறு" என்று தனக்குள்ளே நினைத்துக்கொண்டாள்.

"இயல்வது கரவேல்"

# பலாப்பழம்

பொன்னம்பலம் தாராளமான குணம் உடையவர். அவர் வீட்டு முற்றத்தில் ஒரு பலாமரம் உயர்ந்து வளர்ந்து நின்றது. அந்த மரத்தில் பலமுற்றிய காய்கள் காணப்பட்டன. அந்த ஊரிலே நல்லதம்பி என்று ஒருவன் இருந்தான். அவன் பொன்னம்பலம் வீட்டுக்கு வந்து "ஐயா, அடுத்த வெள்ளிக்கிழமை அம்மன் கோயிலிலே ஒரு பொங்கல் செய்யப்போகிறேன். தயவு செய்து உங்கள் பலாக் காயில் ஒன்று தாருங்கள். இன்று அல்லது நாளை வெட்டிப் போட்டால் தான் வெள்ளிக்கிழமைக்குப் பழுக்கும். நீங்கள் கேட்கும் பணம் தருகிறேன்'' என்றான்.

அம்மன் கோயிற் பொங்கலுக்கு என்று கேட்கும்போது, பழத்துக்குப் பணம் வாங்கக்கூடாது என்று தோன்றியது பொன்னம்பலத்துக்கு. அவர், ''நல்ல தம்பி! நீ கோயிற் பொங்கலுக்கு என்று கேட்கும்போது நான் பணம் வாங்குவது சரியல்ல. உனக்கு விருப்பமான காயை வெட்டி எடுத்துக்கொள். ஆனால் மரத்தில் ஏறும் போது முற்றியிருக்கிற மற்றக் காய்களையும் வெட்டி இறக்கிவிடு. அது போதும் எனக்கு" என்றார்.

"ஐயா உங்களுக்குத் தங்கமான உள்ளம். இப்போது என்னால் மரத்தில் ஏற முடியாது. நாளைக் காலை ஒரு ஆளைக் கூட்டிவந்து முற்றிய காய்களை வெட்டி இறக்கிவிட்டு ஒரு காயை மட்டும் நான் எடுத்துக்கொள்கிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றான் நல்லதம்பி.





நல்லதம்பியும், பொன்னம்பலமும் பேசியதைத் தெருவிலே சென்று கொண்டிருந்த ஆறுமுகம் கேட்டுவிட்டான். ''அடே இவன் நல்லதம்பி பெரிய கெட்டிக்காரன். பணம் கொடுக்காமல் பலாப்பழம் பெற்றுவிட்டான். இவனுக்குப் பலாப் பழம் கிடைக்காமற் செய்ய வேண்டும்'' என்று தனக்குள்ளே யோசித்தான். உடனே பொன்னம்பலத்திடம் சென்றான். ''ஐயா இவன் நல்லதம்பியுடைய கதையில் எடுபட்டு விட்டீர்கள் போலிருக்கு'' என்று இழுத்தான். பொன்னம்பலம், ''விளக்கமாகச் சொல்'' என்று கேட்டார். அதற்கு ஆறுமுகம் ''ஐயா அவன் அம்மனுக்குப் பொங்கப் போகிறேன் என்றதெல்லாம் பொய். இந்த விதமாகப் பலரிடம் சொல்லி ஏமாற்றிப் பல பொருட்களைப் பெற்றிருக்கிறான். ஒருநாளும் பொங்கவும் இல்லை, பூசை செய்யவும் இல்லை.'' என்று பெரிய பொய்யைச் சொன்னான்.

பொன்னம்பலம் தாம் ஏமாந்து விட்டதாக நினைத்தார். "நல்லதம்பி இப்படிப் பொய் சொல்வான் என்று நான் எதிர்பார்க்கவில்லை. நாளைக்கு அவன் வரட்டும்" என்று சிறிது ஆத்திரத்தோடு கூறினார்.

"ஐயா அவன் நாளைக்கு வரும் வரைக்கும் பொறுக்கக்கூடாது. சில நேரம் இரவு வந்து களவாகக் காய்களை வெட்டப் பார்த்தாலும் பார்ப்பான். நானே இப்போது முற்றிய காய்களை வெட்டி இறக்கித் தருகிறேன். ஒரு நீளமான கயிறு எடுத்து வாருங்கள்" என்று நயமாகக் கூறினான் ஆறுமுகம்.

பொன்னம்பலத்துக்கு, ஆறுமுகம் கூறுவது சரிபோற் பட்டது. ஒரு நீண்ட கயிற்றை எடுத்து வந்து அவனிடம் கொடுத்தார். ஆறுமுகம் கயிற்றையும் எடுத்துக்கொண்டு மரத்தில் ஏறினான். உச்சாணிக் கொப்புக்கு ஏறும்போது ஆறுமுகத்தின் கால் தடக்குப்பட்டது. கைப்பிடியுந் தளர்ந்தது. தட்டுத் தடுமாறி மரத்தில் இருந்து "படார்" என்று கீழே வீழ்ந்தான். விழுந்த விழுக்காட்டில் அவனுடைய கால் முறிந்து போயிற்று. வலி தாங்க முடியாமல் அலறினான் ஆறுமுகம். பொன்னம்பலம் பரிதாபமாக அவனைப் பார்த்தார். தூக்கி நிறுத்த முனைந்தார். ஆறுமுகத்தால் எழுந்து நிற்க முடியவில்லை.

அப்போது பொன்னம்பலத்தின் மனைவி தங்கம்மா அங்கே வந்தாள். ஆறுமுகத்தின் நிலையைப் பார்க்கும்போது அவளுக்கு ஒருபுறம் பரிதாபமாகவும் மறுபுறம் கோபமாகவும் இருந்தது. "ஈவது விலக்கேல்" என்ற ஔவைப் பாட்டியின் ஆத்திசூடி உனக்குத் தெரியாதா ஆறுமுகம். நல்லதம்பிக்குப் பலாப் பழம் கிடைக்கப்போவது உனக்குப் பொருமையாக இருந்தது. அதுதானே நீ வந்து பொய்க் கதை கட்டினாய். இப்போது உனக்கு நடந்ததைப் பார்த்தாயா? ஒருவர் மனமுவந்து கொடுப்பதைத் தடுக்கக் கூடாது. தடுத்தால் துன்பம்தான் வரும்" என்றாள்.

ஆறுமுகம் தன் பிழைக்கு மன்னிப்புக் கேட்டான். பொன்னம்பலம் அவனை வைத்தியரிடம் அழைத்துச் செல்ல வண்டி ஒழுங்கு செய்யப் புறப்பட்டார்.

"ஈவது விலக்கேல்"



# இசைக் கச்சேரி

ஆனந்தா மண்டபம் மக்களால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. உலகப் புகழ்பெற்ற சங்கீத வித்துவான் மணிகண்டருடைய இன்னிசைக் சச்சேரி ஆரம்பிக்க இன்னும் சிறிது நேரந்தான் இருந்தது. மணிகண்டர் கர்நாடக இசை, வட நாட்டு இசை, மேல் நாட்டு இசை முதலிய இசை முறைகளையெல்லாம் நன்கு கற்ற ஒரு மேதை. அவருடைய குரலின் இனிமையைச் சொல்லவே முடியாது. அவர் பாடுவதில் மட்டும் அல்லாது பல வகைப் பட்ட இசைக் கருவிகளையும் வாசிப்பதிலும் திறமையுடையவராக இருந்தார்.

இதனால் அவரது கச்சேரிகளுக்குப் பெருந்திரளாக மக்கள் கூடுவர். அதிகபணம் கொடுத்து அனுமதிச் சீட்டுகள் பெறவும் மக்கள் தயாராக இருந்தனர். தனக்குக்

கிடைத்திருக்கும் பெயரையும் புகழையும் கண்டு மணி கண்டன் மிகவும் பெருமை அடைந்தார். தன்னைவெல்லக் கூடிய இசை மேதைகள் உலகிலேயே இல்லை என்று கர்வம் கொண்டிருந்தார்.

அன்று குறிப்பிட்ட நேரத்துக்குக் கச்சேரி ஆரம்ப மாகி மூன்று மணி நேரம் நீடித்தது. அவருடைய இன்னிசையைக் கேட்ட மக்கள் அவரைப் பாராட்டினார் கள். புகழ்ந்து பூமாலை சூட்டினார்கள். பல பரிசில்களை வழங்கினார்கள். இதனால் பெருமையடைந்த மணிகண்டர் சபையில் எழுந்து பேசினார். "அன்பர்களே! உங்கள் பாராட்டை நான் மனமார ஏற்றுக்கொள்கிறேன். என்னு டைய திறமையை நீங்கள் முழுமையாகக் காணவில்லை. கல்லும் கனியும்வண்ணம் நான் இசை மாரி பொழிவேன். என்னோடு போட்டியிடவோ, எனக்கு நிகரானவரோ கிடையாது. இந்தச் சபையிலே என்னோடு போட்டியிடக் கூடியவர் யாராவது இருந்தால் எழுந்து வரலாம்" என்று ஓர் சவால் விட்டார்.

சபையிலே இருந்த பலருக்கு மணிகண்டரின் பேச்சு வெறுப்பைத் தந்தது. "என்னதான் திறமைசாலியாக இருந்தாலும் இவன் தன்னைத் தானே புகழ்ந்து கொள்வது அழகல்ல" என்று பலர் பேசிக்கொண்டனர். அங்கே இருந்த சுரபூபத என்னும் இளைஞனுக்கு மணிகண்டரின் பேச்சுச் சிறிதும் பிடிக்கவில்லை. "இவருடைய இறுமாப்பு இவருடைய திறமையையே மறைத்து விட்டது. இவரைச் சும்மாவிடக் கூடாது" என்று எண்ணியவாறு எழுந்து மேடைக்குச் சென்று அமைதியாகப் பேசினான். "திறமை மிக்க மணிகண்டரே! நீங்கள் இவ்வளவு இறுமாப்பாகப் பேசுவது அழகல்ல திறமை உள்ளவர்கள் அடக்கமாகவே இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுடைய திறமை மேலும் புகழ் அடையும். உங்கள் சவாலை நான் ஏற்கிறேன். நாளை இதே மண்டபத்தில் எமது போட்டியை நடத்துவோம்." என்று, கூறிவிட்டு மேடையை விட்டு இறங்கித் தனது ஆசனத்தில் அமர்ந்தான். மக்கள் கைதட்டி ஆரவாரித்தனர்.



மறுநாள் ஆனந்தா மண்டபத்தில் மணிகண்டர் சுரபூபதி இசைப்போட்டி நடுவர்கள் முன்னிலையில் ஆரம்ப மாகியது. முதலில் மணிகண்டரே பாட ஆரம்பித்தார். சபையிலே ஒரே அதிர்ச்சி. "நேற்று, தேவகானம் போல் பாடிய அவருடைய குரலுக்கு என்ன நடந்து விட்டது" என்று ஒருவரை ஒருவர் கேட்டுக்கொண்டனர். அவ்வளவு தூரம் அவருடைய குரல் கர்ண கடூரமாக இருந்தது. கோழி கேருவது போல் ஒலித்தது.

முதல் நாட் கச்சேரியின் பின் மணிகண்டர் மிகவும் குழப்ப நிலையில் இருந்தார். தன்னை எதிர்க்க ஒருவன் வந்துவிட்டானே என்று பெரும் ஆத்திரம் அடைந்திருந் தார். இரவு முழுவதும் அவருக்குத் தூக்கமே வரவில்லை. குளிர் காற்றும் பனியும் அவர் தொண்டையை அடைக்கச் செய்துவிட்டன. இதனால் அவரால் ஒருபாட் டைக்கூடத் திறமையாகப் பாட முடியவில்லை. மக்கள் கைகொட்டிக் கேலி செய்து சிரித்தனர்.

அப்போது சுரபூபதி "உடையது விளம்பேல்" என்று ஆரம்பிக்கும் ஒரு பாட்டைப் பாடினான். அவனுடைய குர லின் இனிமையையும் பாட்டின் கருத்தையும் உணர்ந்த மக் கள் கைதட்டி ஆரவாரித்தனர். சுரபூபதியின் பாட்டு முடிந்ததும் மணி கண்டர் எழுந்து "அன்பர்களே! என்னை மன்னித்து விடுங்கள். "உடையது விளம்பேல்" என்ற ஆத்திசூடி வாக்கியத்தை நான் மறந்தேன். அதனால் அவமானமும் அடைந்துவிட்டேன். ஔவைப் பாட்டியின் போதனையை மறந்த எனக்கு இதுநல்ல தண்டனை. என் திறமையை நானே புகழ்ந்து பறைசாற்றியது தவறு. இந்த இளைஞன் உண்மையில் போற்றப்பட வேண் டியவன். என்னிலும் பார்க்க அவனே திறமைசாலி, மேலோன் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். என்னை மன்னியுங்கள்" என்று கூறி இரு கைகளையும் கூப்பி வணங்கினார்.

மக்கள் கைதட்டி ஆரவாரித்தனர்.

"உடையது விளம்பேல்"


# வெகுமதி

ஆழிமாறன் என்பவன் பெரிய வியாபாரி. அவனிடம் பல மீன்பிடி வள்ளங்களும், வேகமாகப் போகும் இயந்திரப் படகுகளும் இருந்தன. வெளித்தோற்றத்துக்கு ஆழிமாறன் மீன்பிடித்தொழில் செய்யும் ஒரு பெரிய வியாபாரியாகவே காணப்பட்டான். அவனிடம் ஏறக் குறைய நூறு பேருக்கு மேலாக வேலை பார்த்து வந்தனர். அவனுடைய வேலையாட்கள் அனைவரும் நல்ல பயபக்தியாகத் தமது கடமைகளைச் செய்து வந்தனர். அனைவருக்கும் ஆழிமாறன் நல்ல சம்பளம் கொடுப்பதோடு பல வசதிகளும் செய்து தந்தான்.

ஆழிமாறனுடைய நாட்டிலே கள்ளக் கடத்தல் பெருமளவில் நடைபெறுகின்றது என்று அரசாங்கம் அறிந்தது. பிற நாடுகளில் இருந்து சட்டவிரோதமாகப் பொருட்களைத் தோணிகளிலும், இயந்திரப் படகுகள் மூலமும் கொண்டு வந்து அந்த நாட்டில் அதிக பணத்துக்கு விற்று வருகிறார்கள் என்று செய்திகள் பரவின. இதைத் தடுப்பதற்காக அரசாங்கம் கடற் கரைகளிலும், துறைமுகம், ஆகாய விமான நிலையம் முதலிய இடங்களிலும் பலத்த காவல் நடவடிக்கைகள் மேற்கொள்ளலாயிற்று. கடற்படையினரின் இயந்திரப் படகுகள் கரையோரங்களில் காவல் புரிந்து கொண்டிருந்தன.



ஒரு நாள் கடற்படையைச் சேர்ந்த மூவர் தங்கள் இயந்திரப் படகில் ஏறிக் கரை யோரமாகச்சுற்றி வந்தனர். அம்மூவரில் க்ண்டதுவிடோன் என்னும் இளைஞனும் இருந்தான். அவன் மிகுந்த திறமைசாலி. நன்றாக நீந்தவும், நீரில் மூழ்கவும், இயந்திரப் படகை வேகமாக ஓட்டவும், பயிற்சி பெற்றிருந்தான். கடற்படையினர் இப்படிச் சுற்றி வரும் வேளை அவர்களுடைய கண்களுக்கு வேறுமோர் இயந்திரப் படகு தென்பட்டது. அந்தப்படகு அவர்களுக்குச் சந்தேகத்தை ஊட்டியது. உடனே அவர்கள் தமது படகை எதிரே தெரிந்த படகின் திசைக்குச் செலுத்தினர். கடற்படையினரின் படகு தம்மை நோக்கி வருவதைக் கண்ட மற்றப் படகு மறுபுறமாகத்திரும்பி வேகமாக ஓடத் தொடங்கியது.



கடற்படையினர் மிகுந்த வேகமாகத் தமது படகைச் செலுத்தினர். மற்றப் படகும் வெகு விரைவாகச் சென்றது. கடற்படையினரின் படகு தமது படகை அண்டி வந்து விட்டது என்று அறிந்த மற்றப் படகினர் தடுமாறினர். படகை அங்கும் இங்குமாக வளைத்து வளைத்து ஓட்டினர். கடற்படையினரும் விட்டுக்கொடுக்கவில்லை. இதற்கிடையில் துரத்தப்பட்ட படகில் இருந்த ஒருவன் ஏதோ ஒரு பொதியைப் படகினின்றும் எடுத்து மெதுவாகக்

கடலிலே போட்டான். அது பாரமான பொதியாக இருந்தமையால் நீரில் மூழ்கி மறைந்தது. பொதியைக் கடலில் வீசியதைக் கண்டதுவிடோன் பார்த்துவிட்டான். அந்த இடத்தின் குறிப்பை மிகவும் அவதானமாக மனத்திற் பதித்துக்கொண்டான்.

கடற்படையினரில் ஒருவன் தனது கைத்துப்பாக்கியை எடுத்து மேல் நோக்கிச் சுட்டுப் பயமுறுத்தினான். படகை நிறுத்தும்படி கட்டளையிட்டான். தப்பிஓட முடியாது என்று அறிந்த கடத்தற்காரர்கள் கடற்படையினரிடம் சரண் புகுந்தனர். அகப்பட்டவர்கள் ஆழிமாறனின் ஆட்கள் என்று கடற்படையினர் தெரிந்துகொண்டனர். ''கடலிலே வீசிய பொதியில் என்ன இருந்தது'' என்று கண்டதுவிடோன் ஆழிமாறனின் ஆட்களைக் கேட்டான். அவர்கள் தாம் ஒன்றையும் வீசவில்லை என்று ஒரேயடியாக மறுத்தனர். கண்டது விடோனுக்கு அவர்கள் மேல் கோபங் கோபமாக வந்தது. கடத்தற் படகில் இருந்த இருவருக்கும் கைவிலங்கிட்டுக் கவனமாகப் பார்த்துக் கொள்ளும்படி தனது நண்பரிடம் சொன்னான் கண்டதுவிடோன். பின்னர் தனது படகிலேயிருந்த நீச்சல் உடுப்பை அணிந்து கொண்டு பொதி வீசப்பட்ட குறிப்பிலே நீரில் மூழ்கினான். ஐந்து நிமிடங்கள் வரை நீரின் அடியிற் சென்று தேடினான். ஒன்றும் அகப்படவில்லை. பின்னர் மேலே வந்து மூச்சு வாங்கினான். இப்படியாக அந்தப் பகுதியில் ஆறேழு முறை நீரில் மூழ்கிப் பொதியைத் தேடினான். ஆனால் பொதி அகப்படவில்லை.

அவனுடைய நண்பர்கள் அவனது முயற்சியைக் கைவிடும்படி வற்புறுத்தினர். ஆனால் கண்டதுவிடோன் அவர்களைப் பார்த்து ''ஊக்கமது கைவிடேல்'' என்று ஔவையார் சொல்லியிருப்பது உங்களுக்குத் தெரியாதா? இதோ இது எட்டாவது முறை. இம்முறை கட்டாயம் அகப்படும்'' என்று கூறியவாறு நீரில் மூழ்கினான். இந்த முறை மறுமுறைகளிலும் பார்க்க அதிகநேரமெடுத்து



ஊக்கமாகத் தேடினான். அவன் முயற்சி வீண்போகவில்லை பொதி அகப்பட்டுவிட்டது. அதனைக் கொழுவி இழுத்துக்கொண்டு மேலே வந்தான். நண்பர்கள் ஆச்சரியத்தில் மூழ்கினர்.

ஆழிமாறன்மேல் வழக்குத் தொடரப்பட்டது. அவனுக்கும் அவனுடைய ஆட்களுக்கும் பெரிய அபராதம் விதிக்கப்பட்டது. கடத்திவரப்பட்ட பொதி பறிமுதல் செய்யப்பட்டது. அந்தப் பொதியிலே பதினைந்து தங்கப் பாளங்கள் இருந்தன. அரசாங்கம் அவற்றின் பெறுமதியின் ஒரு பகுதியைக் கண்டதுவிடோனுக்கும், அவனுடைய நண்பர்களுக்கும் வெகுமதியாக வழங்கியது. கண்டதுவிடோனுடைய விடாமுயற்சியே தமக்கு வெகுமதி கிடைக்கச் செய்தது என்று மற்ற நண்பர்கள் அவனைப் பாராட்டினர். ஔவையாரின் ''ஊக்கமது கைவிடேல்'' என்ற அறிவுரையே தமக்கு வெகுமதி பெற்றுத் தந்தது என்று கண்டதுவிடோன் கூறி மகிழ்ந்தான்.

''ஊக்கமது கைவிடேல்''

# நன்னான்கு பதினாறு நாலும் நாலும் எட்டு

**ந**ன்னான்கு பதினாறு, நன்னான்கு பதினாறு, பதினாறு நூறு, ஆயிரத்து அறுநூறு என்று மனப்பாடஞ் செய்து கொண்டு வண்டியை ஓட்டினான் பரமகுரு. அவனுடைய வண்டியிலே நாலுமூடை வெங்காயம் இருந்தது. அந்த மூடைகள் ஒவ்வொன்றிலும் நாலு தூக்கு வெங்காயம் இருந்தது. ஆகவே அவன் பதினாறு தூக்கு வெங்காயம் தன் வண்டியிலே வைத்திருக்கிறான். அந்த வண்டியில் உள்ள வெங்காயத்தைப் பட்டணத்தில் உள்ள ஒரு வியாபாரியிடம் கொடுத்துப் பணம்பெறச் செல்கிறான் பரமகுரு. ஒரு தூக்கு வெங்காயத்தின் விலை நூறு ரூபா. எனவே பதினாறு தூக்கு வெங்காயத்துக்கும் அவனுக்கு ஆயிரத்து அறுநூறு ரூபா கிடைக்க வேண்டும்.

பரமகுரு எழுத, வாசிக்கப் படிக்கவில்லை. அவனுக்குக் கணக்குப் பார்க்கவும் தெரியாது. பரமகுருவின் தந்தை குமாரசாமி ஒரு விவசாயி. அவர் ஓரளவு எழுத வாசிக்கப் படித்திருந்தார். ஆனால் தான் நிறையப் படிக்கவில்லையே என்று அவர் அடிக்கடி வருத்தப்படுவார்.

தன்னுடைய மகன் பரமகுருவை இளமையிலேயே படிக்கவைக்க வேண்டும் என்று பெரிதும் விரும்பினார் குமாரசாமி. ஆனால் பரமகுரு பள்ளிக்கூடம் செல்ல மறுத்துவிட்டான். தனக்குப் படிப்பே வேண்டாம் என்று அடம் பிடித்தான். குமாரசாமிக்குப் பெரும் கவலை. இருந்தும்




மகனைப் படிக்கவைக்க அவருக்கு முடியவில்லை. அவர் கூறிய புத்திமதிகளைப் பரமகுரு தட்டிக்கழித்தான்.

பரமகுரு வளர்ந்து வாலிபனானதும் தந்தையோடு தோட்ட வேலையில் ஈடுபட்டான். மிகுந்த கஷ்டப்பட்டு விவசாயம் செய்தான். அவர்களுடைய முயற்சிக்குத் தக்க நல்ல பலன் கிடைத்தது. அப்போது பரமகுரு தகப்பனைப் பார்த்து, ''படிப்பு வேண்டும் படிப்பு வேண்டும் என்று என்னை வற்புறுத்தினீர்களே, படிக்காமலே நான் வாழவில்லையா அப்பா'' என்று கேட்டான். குமாரசாமி தனது மகனின் மடமையை நினைத்துக் கவலைப்பட்டார்.

“கல்வியின் மகிமையை என்றாவது ஒருநாள் நீ உணருவாய்'' என்று வருத்தத்தோடு கூறினார்.

தோட்டத்திலே விளைந்த வெங்காயத்தைப் பட்டணத்து வியாபாரிக்கு விற்பதற்கு ஒழுங்கு செய்தார் குமாரசாமி. ஆனால் எதிர்பாராத விதமாக அவரால் பட்டணம் போக முடியவில்லை. அவரது உடல்நிலை சரியாக இருக்கவில்லை. எனவே மகன் பரமகுருவிடம் அன்று வெங்காயத்தைக் கொடுத்து அனுப்பினார். அவன் கொண்டு செல்லும் வெங்காயத்தின் அளவையும் அதற்கான விலையையும், மொத்தமாக அவன் வாங்கி வரவேண்டிய பணத்தின் தொகையையும் விரிவாகச் சொல்லி அனுப்பினார். அதை மனப்பாடஞ் செய்துகொண்டுதான் பரமகுரு வண்டியைப் பட்டணத்துக்கு ஓட்டிக்கொண்டிருந்தான்.



பட்டணத்தை அடைந்ததும் குறிப்பிட்ட வியாபாரியிடம் தான் கொண்டுவந்த வெங்காய மூடைகளைக் கொடுத்தான். தந்தை சொல்லிவிட்ட படி மனப்பாடஞ் செய்த

கணக்கையுஞ் சொல்லி ஆயிரத்து அறுநூறு ரூபா தரும்படி கேட்டான். பரமகுரு எழுத்தும், கணக்கும் படியாதவன் என்பது வியாபாரிக்குத் தெரியும். ஆகவே பரமகுருவை மோசஞ்செய்ய எண்ணினான். அவன் கொண்டு வந்த வெங்காயத்துக்கு எண்ணூறு ரூபாதான் வருமதி என்று கூறினான். பரமகுரு தகப்பன் சொன்ன கணக்கை ஒப்புவித்தான்.

வியாபாரி சிரித்துவிட்டு ''தம்பி உன் அப்பா போட்ட கணக்குப் பிழைத்துவிட்டது. இதோ நான் கணக்குப் போட்டுக் காட்டுகிறேன்'' என்று கூறி எட்டுப் புளியங் கொட்டைகளை எடுத்தான். ''இதோ பார், நீ கொண்டு வந்தது நாலு மூடைகள். அந்த நாலு மூடைகளும்தான் இந்த நாலு புளியங்கொட்டைகள். இதோ இதில் உள்ள மற்ற நாலு புளியங் கொட்டைகளுந்தான் ஒரு மூடையில் இருக்கின்ற நாலு தூக்குகள். ஆகவே நாலு மூடைகளிலும் உள்ள மொத்த நிறை நாலும் ஒன்றும் ஐந்து, ஐந்தும் ஒன்றும் ஆறு, ஆறும் ஒன்றும் ஏழு, ஏழும் ஒன்றும் எட்டுத் தூக்கு'' என்று புளியங்கொட்டைகளைக் கூட்டிக் காட்டினான். எட்டு தூக்குக்கும் எண்ணூறு ரூபாதான் வருமதி என்று கணக்குக் காட்டினான்.

பரமகுருவுக்கு அவன் சொல்லும் கணக்குச் சரிபோல் இருந்தது. ஒரு வேளை தந்தை கணக்கிற் பிழை விட்டிருப்பாரோ? என்று யோசித்தான். அப்படி அவன் யோசிக்கும்போது வியாபாரி ''தம்பி நீர் யோசிக்க வேண்டாம். நான் உமது தந்தைக்கு ஒரு கடிதம் எழுதித் தருகிறேன். அவர் அதை வாசித்துப் பார்த்தால் எல்லாம் விளங்கி விடும்'' என்று நயமாகக் கூறினார். பரமகுருவும் வியாபாரியின் சொல்லை நம்பி எண்ணூறு ரூபாவையும் கடிதத்தையும் பெற்றுக்கொண்டு வீடு திரும்பினான்.

குறிப்பு: தூக்கு எனக் குறிப்பிடப்படுவது தாளோடு கட்டப்படும் ஒரு வெங்காயக்கட்டு. இதன் நிறை ஏறக்குறைய 28 இருத்தல் இருக்கும்.



தந்தையிடம் கடிதத்தையும் பணத்தையும் கொடுத்தான். கடிதத்தைப் படித்துப் பார்த்த குமாரசாமி ''நீ வியாபாரியிடம் எத்தனை மூடைகள் கொடுத்தாய்'' என்று பரமகுருவிடம் கேட்டார். ''நான் நாலு மூடைகள் தானே கொண்டு சென்றேன். அவற்றை அப்படியே அவனிடம் கொடுத்தேன்; என்றான். ''தன்னிடம் இரண்டு மூடைகள் மட்டுந்தான் நீ கொடுத்ததாகவும் அதற்கான எண்ணூறு ரூபா அனுப்பி இருப்பதாயும், மீதி இரண்டு மூடைகளையும் வழியில் கள்வர் தட்டிக்கொண்டு போய் விட்டதாக நீ அவனிடம் கூறியதாகவும் எழுதியிருக்கிறான்'' என்றார் குமாரசாமி.

பரமகுரு தன்னை வியாபாரி மோசஞ் செய்துவிட்டதை அப்போதுதான் உணர்ந்தான். பொய்க்கணக்குப் போட்டும், பொய்க் கடிதம் எழுதியும் தன்னை மடக்கி விட்டான் என்று ஆத்திரப்பட்டான். அப்போது குமாரசாமி ''மகனே எண்ணெழுத் திகழேல்'' என்று ஔவை சொன்னது பொய்க்கவில்லை. கணிதம் எழுத்து; முதலியன உனக்குத் தேவையில்லை என்று உதறித்தள்ளினாய். இப்போது அவற்றின் மகிமையை நீயே உணர்ந்துகொண்டாய்'' என்றார்.

பரமகுரு தன் தவறை உணர்ந்துகொண்டு அன்றே எண்ணும்; எழுத்தும் கற்க முடிவு செய்து கொண்டான்.

''எண்ணெழுத் திகழேல்''

# புல்லுச் சத்தகம்

வள்ளிக் கிழவி திடீர் என்று இறந்துவிட்டதாகச் செய்தி ஊரெங்கும் பரவியது. ''பாவம் நல்ல கிழவி. அப்படி என்ன வந்தது'' என்று எல்லோரும் அனுதாபப் பட்டார்கள். வள்ளிக் கிழவிக்கு அந்த ஊரில் உற்றார் உறவினர் யாருமே கிடையாது. நெடுங்காலமாக அவளும் அவளுடைய மகளும் அந்த ஊரிலேயே வாழ்ந்து வந்தார்கள். வறியவர்களான அவர்களுக்கு இருக்கக் கூட ஒரு குடிநிலம் கிடையாது. யாரோ ஒரு பணக்காரருடைய நிலத்திலே ஒரு சிறிய குடில் கட்டிக்கொண்டு சீவித்து வந்தார்கள்.

வள்ளி தன் மகளுக்கு விவாகம் பண்ணி வைத்தாள். அவர்கள் எல்லோரும் கூலி வேலை செய்தும்; புல் வெட்டி விற்றும் சீவியத்தை நடத்தினார்கள். வள்ளியின் மகளுக்கு வட்டன் பிறந்தான். பேரனைக் கண்ட வள்ளி பூரிப்படைந்தாள். ஆனால் அவளுடைய மகிழ்ச்சி நீடிக்கவில்லை. வட்டன் பிறந்ததும் அவனுடைய தந்தை அவர்களை விட்டுவிட்டு எங்கோ போய் விட்டான். கணவனின் பிரிவைத் தாங்காமல் வள்ளியின் மகளும்





நோய் வாய்ப்பட்டுச் சீக்கிரமே இறந்து போனாள். வள்ளி பெரும் துயரப்பட்டாள். தானும் தன் பேரன் வட்டனும் எப்படிச் சீவிக்க முடியும் என்று வருந்தினாள். அவளுக்கு வயது சென்ற நிலை. இருந்தாலும், அந்த ஊரிலே உள்ள வயல் வெளிகளில் புல் வெட்டி, அந்தப் புல்லை ஊரவர்களுக்கு விற்றுச் சீவியத்தை நடத்தினாள். தன்னுடைய பேரன் வட்டனை மிகவும் கவனமாக வளர்த்து வந்தாள்.

வட்டனுக்கு இப்போது வயது பன்னிரண்டு இருக்கும். அவன் வள்ளியின் பின்னே சென்று விளையாடுவான். அவள் புல் வெட்டும்போது இவன் வண்ணாத்திப் பூச்சிகளைப் பிடித்து விளையாடுவான். அன்று இருந்தாற்போல் வள்ளிக் கிழவி இறந்து விட்டாள். இரவு படுத்த கிழவி விடிந்ததும் எழுந்திருக்கவில்லை. வட்டன் கதறி அழுதான். ''ஆச்சி ஆச்சி'' என்று மண்மீது வீழ்ந்து புரண்டான். அவனை எவராலும் தேற்ற முடியவில்லை.

ஊரில் உள்ள நாலு பெரிய மனிதர் வள்ளியின் சடலத்தை அடக்கம் செய்ய ஒழுங்கு செய்தனர். கிழவி இறந்து ஒரு வாரம் வரை ஊரில் உள்ளவர்கள் வட்டனுக்கு உணவு கொடுத்து ஆறுதல் வார்த்தை சொன்னார்கள். பின்னர் அவனை ஒருவரும் கவனிக்காது விட்டுவிட்டனர். வட்டனுக்குப் பசிதாங்க முடியாமல் இருந்தது. எனவே வீடு வீடாகச் சென்று பிச்சை கேட்டு உண்டான். சிறிது காலஞ் செல்லப் பிச்சை கொடுப்பவர்களும் குறைந்து கொண்டு வந்தனர். வட்டன் பிச்சை கேட்டபோதெல்லாம் ''இவனைப் பாருங்கள் வண்டுபோல இருக்கிறான். விடிந்ததும் விடியாததுமாகப் பிச்சைக்கு வந்துவிடுகிறான். இவனுடைய தாயை எடுத்துப் புதைத்தது இந்த ஊர்மக்கள். பின்னர் இவனுடைய பேத்திக் கிழவியின் பிணத்தை எடுத்துப் புதைத்தது நாங்கள். இப்போது இவனுக்கும் நாளாந்தம் சோறு போடவேண்டியிருக்கு. இவனுக்குப் பிச்சை எடுத்துத் தின்ன வெட்கமாக இல்லையா?'' என்று கேவலமாகப்

பேசினர். இந்த வார்த்தைகளைக் கேட்ட வட்டனுக்குப் பெரும் வெட்கமும் துக்கமுமாக இருந்தது. பிச்சை எடுப்பது கேவலமான செயல் என்று அவனுக்குத் தெரிந்தது. இனிமேல் பிச்சை எடுப்பதில்லை என்று முடிவு செய்து கொண்டான்.

தன்னுடைய பாட்டியுடைய புல்லுச் சத்தகத்தை தேடி எடுத்தான். நேராக வயல் வெளிக்குச் சென்று புல் வெட்டத் தொடங்கினன். நாள் முழுவதும் தான் வெட்டிய புல்லைக் கட்டிக்கொண்டு வந்து சந்தையில் விற்றான். அதனால் கிடைத்த பணத்தைக் கொண்டு ஊரில் உள்ள கடையொன்றில் சாப்பிட்டான். இரவிலே தனது பேத்தியின் குடிலில் நித்திரை செய்தான்.

வட்டனின் இந்தச் செயலை ஊரில் இருந்த ஒரு பெரியார் கவனித்தார். ''ஏற்ப திகழ்ச்சி'' என்ற ஔவையின் மொழியைப் படிக்காமலே இவன் பின்பற்றுகிறன். இவன், பிச்சை எடுப்பது கேவலம் என்று தானுகவே உணர்ந்து விட்டான். இவனிடம் நல்ல திறமை உண்டு. இவனைப் படிப்பித்து நல்ல அறிவாளியாக்க வேண்டும்'' என்று எண்ணினர். அவ்வாறே செய்ய ஒழுங்குகளும் செய்தார். வட்டன் மகிழ்ச்சியடைந்தான்.

"ஏற்பது இகழ்ச்சி''

---

# நல்ல பாடம்

வணங்காமுடி என்பவன் நாடறிந்த ஒரு பெருந் திருடன். அவனையும் அவன் கூட்டத்தினரையும் பிடிக்க ஒருவராலும் முடியாது. அவன் மாறு வேடங்களில் ஊர்களில் உலாவுவான். ஏழை மக்கள் அவனை அறிந்திருந்தார்கள். அவன் ஏழைகளிடம் திருடமாட்டான். பெரிய பணக்காரர்களிடமும், கொள்ளை இலாபம் எடுக்கும் பெரிய வியாபாரிகளிடமுந்தான் திருடுவான். திருடிய சொத்தைத் தான்வைத்து அனுபவிக்க மாட்டான். ஏழைகளுக்கும், நல்லவர்களுக்கும் கொடுத்து விடுவான். இதனல் நாட்டுமக்களிற் பெரும்பாலானேர் அவனைக் காட்டிக்கொடுக்க முன்வரவில்லை. வணங்காமுடி ஏழைகளுக்கு நேருங் கஷ்டங்களையும் தீர்த்து வைத்தான்.

வணங்காமுடி வாழ்ந்துவந்த நாட்டிலே ஈயாப்புரம் என்று ஒரு சிற்றூர் இருந்தது. அங்கே இரந்துண்ணி என்ற ஒரு பிச்சைக்காரக் கிழவன் இருந்தான். கிழவனுன அவனால் வேலைசெய்து சீவிக்க முடியவில்லை. எனவே அவன் பிச்சை எடுத்துச் சீவித்தான். ஈயாப்புரத்தில் உள்ள மக்கள் தருமஞ் செய்ய மாட்டார்கள்.

அந்த ஊரில் உள்ள எந்த வீட்டில் போய் '' அம்மா பசிக்குது, தாயே பசிக்குது'' என்று இரந்துண்ணி கேட்டாலும் எல்லோரும் ''போ போ'' என்றே விரட்டுவர். ஆனல் தருமையன் என்பவன் வீட்டில் மட்டும் அவனுக்கு ஏதாவது உணவு எந்நாளும் கிடைக்கும். தருமையன் தினமும் இரந்துண்ணிக்கு ஏதாவது உண்ணக் கொடுத்த

பின்பே தான் உண்பான். இரந்துண்ணி தருமையனிடம் மிகுந்த அன்பு வைத்திருந்தான். அவனைத் தெய்வம் எனப் போற்றினான்.

ஆனால் இரந்துண்ணிக்கு ஈயாப்புரத்தில் உள்ள மற்ற மக்களிடம் மிகுந்த வெறுப்பாக இருந்தது. அவர்களுக்கு எப்படியாவது ஒரு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும் என்று விரும்பினான் இரந்துண்ணி. ஒருநாள் அவன் வணங்காமுடியைச்சந்தித்து ஈயாப்புரத்தாரின் பிச்சையிடாத் தன்மையைப் பற்றிச் சொன்னான். வணங்காமுடி அதற்கு வேண்டியது செய்வதாகக் கூறினான்.



பின்பு ஒரு நாள் ஈயாப்புரத்தில் உள்ள வீடுகளில் எல்லாம், ஒரே இரவு திருட்டுப் போய்விட்டது. ஆனால் தருமையனின் வீட்டில் மட்டும் எதுவித திருட்டும் நடக்கவில்லை.

அடுத்த நாள் காலை ஈயாப்புரமே பெரும் அமளியாக இருந்தது. அதிகாலையில் எழுந்த மக்கள் தங்கள் வீடுகளில் திருடர் இரவு வந்து எதையாவது திருடிக்கொண்டு போய் விட்டதை ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டனர். தருமையன் வீட்டில் மட்டும் எதுவித திருட்டும் நடக்கவில்லை என்று கதைத்தனர். அதுமட்டும் அல்லாமல் எல்லாருடைய வீட்டுச் சுவர்களிலும் ''ஐய மிட்டுண்'' என்று எழுதியிருப்பதாயும் தருமையன் வீட்டில் மட்டும் அப்படி எழுதப்படவில்லை என்றும் பேசிக்கொண்டிருந்தனர். இந்த மர்மம் விளங்காமல் பலர் ஆச்சரியப்பட்டனர். அப்போது அங்கே வந்த ஒரு கிழவர் ''ஐய மிட்டுண்'' என்பது ஆத்திசூடி



வாக்கியம். பிச்சை கேட்பவர்களுக்கு உணவளித்த பின் உண்ண வேண்டும் என்பது அதன் பொருள். இந்த ஊரில் உள்ள நாம் இதைமறந்து பிச்சையிடாமல் வாழ்கிறோம்.

தருமையன் மட்டும் தினமும் பிச்சை இட்டு உண்கிறான். எமக்கு ஒரு பாடம் கற்பிக்கவே எங்கள் வீடுகளில் திருடியிருக்கிறார்கள். இது வணங்காமுடியின் வேலையாகத் தான் இருக்கும். தருமையனுக்கு ''ஐய மிட்டுண்'' என்பது நன்றாகத் தெரியும். அவன் அதன்படி நடக்கிறான். ஆகவே அவன் வீட்டில் திருடவும் இல்லை; அந்த வாக்கியத்தை எழுதவும் இல்லை. மற்ற எல்லோரும் ''ஐய மிட்டுண்'' என்பதை மனத்திற் பதிக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் வீடுகளின் சுவரில் ''ஐய மிட்டுண்'' என்று எழுதிச் சென்றிருக்கிறார்கள்'' என்று விளக்கிக் கூறினார்.

தங்கள் தவறையும், அறியாமையையும் உணர்ந்த ஈயாப் புரத்து மக்கள் அன்றிலிருந்து ஔவையின் ''ஐய மிட்டுண்'' என்னும் அறிவுரையைக் கடைப்பிடித்து வாழ்ந்தார்கள். இரந்துண்ணி மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். பின்னர் ஒரு நாளும் அந்த ஊரில் திருட்டு நடக்கவில்லை.

''ஐய மிட்டுண்''

# குண்டு வீச்சு

அப்பொழுது, இரண்டாவது உலக மகாயுத்தம் நடந்து கொண்டிருந்தது. யப்பானிய விமானப்படை, ஆங்கிலேயருடைய ஆட்சிக்கு உட்பட்ட நாடுகளில் குண்டுமாரி பொழிந்து கொண்டிருந்த வேளை. எதிரிகளின் விமானங்கள் குறிப்பறிந்து குண்டு வீசுவதைத் தடுக்க, இரவு நேரங்களில் வீட்டுக்கு வெளியே வெளிச்சங்கள் கொண்டு செல்லக்கூடாது என்று ஆங்கிலேயர் தமது ஆட்சிக்குட்பட்ட நாடுகளில் உத்தரவிட்டிருந்தனர். வீடுகளிலும் வீதிகளிலும் உள்ள விளக்குகளின் கண்ணாடிகளுக்குக்கூட நீல வர்ணம் பூசி ஒரு பக்கம் மட்டும் ஒளிவரக் கூடியதாக விடப்பட்டிருக்க வேண்டும் என்று கட்டளை இடப்பட்டிருந்தது.



குண்டு வீச்சில் எத்தனையோ பேர் உயிரிழந்தனர். பொருட்களும் கட்டிடங்களும் சேதமடைந்தன. அது மக்களுக்குப் பெரும் பயங்கரமான காலமாக இருந்தது. இந்தக்காலத்திலே ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்ட நாடொன்றில் அழுங்குப்பிடியன் என்று ஒருவன் இருந்தான். அவன் தான் நினைப்பதுதான் சரி என்று எண்ணுபவன். ஊர் மக்கள், நாட்டு மக்கள் எப்படி நடக்கிறார்கள் என்று அவன் கவனிப்பதில்லை. இந்த



அழுங்குப்பிடியன் அதிகாரிகள் விதித்திருந்த சட்டத்தைப் பொருட்படுத்தவில்லை. அவனுடைய ஊரில் உள்ள மக்கள் எல்லோரும் இரவு வேளைகளில் விளக்குகளை அதிகம் உபயோகிக்காமலும் மூடி மறைத்தும் உபயோகித்து வந்தார்கள். இவன் மட்டும் விளக்குகளை அடிக்கடி வெளியே கொண்டு சென்றும், மூடி மறைக்காமலும் உபயோகித்தான்.

இப்படி அழுங்குப்பிடியன் விளக்குகளை உபயோகிப்பதன் கெடுதி அவனுக்கு விளங்கவில்லை. எதிரிகள் ஆகாய விமானங்களில் இரவிலே பறந்து செல்லும்போது இந்த வெளிச்சங்களைக் கண்டால் அவ்விடத்தில் மக்கள் வாழும் மனைகள் இருக்கின்றன என்று அறிந்துகொள்வார்கள். உடனே அவ்விடத்தில் குண்டுகளை வீசுவார்கள். இதைத் தடுப்பதற்காகவே மேற்கண்ட சட்டம் விதிக்கப்பட்டிருந்தது. அழுங்குப்பிடியனை ஊர்மக்கள் வெளிச்சங்களை வீட்டுக்கு வெளியே கொண்டு செல்லவேண்டாம் என்று பலமுறை சொல்லிப் பார்த்தனர். அவன் கேட்கவில்லை. மக்கள், அதிகாரிகளிடமும் அறிவித்தனர். ஆனால் அதிகாரிகள் வரும்போது அழுங்குப்பிடியன் தனது வெளிச்சங்களை அணைத்துவிட்டு இருட்டில் இருப்பான்.

ஒருநாள் இரவு அழுங்குப்பிடியன் வெளிச்சத்தைக் கொண்டு வெளியே சென்றான். அப்போது மேலே பறந்து சென்ற எதிரிகளின் விமானத்திலுள்ளவர்கள் அதைக் கண்டுவிட்டனர். உடனே அவ்விடத்தில் குண்டுகள் வீசப்பட்டன. அழுங்குப்பிடியனின் வீடும், அதை அடுத்துள்ள வீடுகளும் இடிந்து வீழ்ந்தன. அழுங்குப் பிடியனும் அவன் குடும்பமும் மற்றும் அந்தத் தெருவிற் குடியிருந்த பலரும் இறந்துபோயினர். அழுங்குப்பிடியனின் குழந்தை ஒன்று மட்டும் உயிர் பிழைத்தது. அந்தக் குழந்தை அனாதையாக அழுதுகொண்டு தெருவில் வந்தது. அப்போது அங்கே வந்த ஒரு பெண், குழந்தையைத் தூக்கி ஆதரவு செய்தாள். அது அழுங்குப்பிடியனின் குழந்தை என்று அடையாளங்கண்டு கொண்டாள்.

''உன்னுடைய தகப்பன், ''ஒப்புர வொழுகு'' என்பதை மதியாமல் நடந்தான். உலகப் போக்கை அறிந்து அதற்குத் தக்கபடி நடப்பதைத்தான் ''ஒப்புரவொழுகு'' என்று ஔவையார் சொன்னார். உன் தந்தை ஊரவர்கள் நடப்பதைப் பார்த்து அதன் படி வெளிச்சத்தை வெளியில் கொண்டுசெல்லாமல் இருந்திருந்தால் இந்தக் கேடு உனக்கு வந்திருக்காது. நீ என்ன செய்வாய் பாவம். இவை உனக்கு விளங்காது. உன்னை இனி யார் காப்பாற்றுவார். நான்கூட உன்னை வளர்க்க வழியற்றவள். எங்காவது ஒரு அனாதை விடுதியிற்தான் உன்னைச் சேர்க்க வேண்டும்'' என்று கூறினாள். குழந்தைக்கு ஒன்றும் புரியவில்லை. அது 'ஓ' என்று அழ ஆரம்பித்தது. அந்தப் பெண் குழந்தையைத் தூக்கிக் கொண்டு தன் வீடு நோக்கி நடந்தாள்.

''ஒப்புரவொழுகு'' என்பதை உணராத அழுங்குப் பிடியனின் வாழ்வு பாழானது மட்டும் அல்லாமல்; அவன் தெருவில் இருந்த மக்களின் வாழ்வும் பாழாயிற்றே என்று அந்தப் பெண் மனங்கலங்கினாள். ஔவையின் வாக்கு எவ்வளவு உண்மையானது என்று ஆச்சரியப்பட்டாள்.

''ஒப்புரவொழுகு''

---

# என் கதை

சத்தியமூர்த்தி என்பவர் புகழ்பெற்ற ஓர் எழுத்தாளர். அவர் எழுதுகின்ற சிறுகதைகளையும், நெடுங்கதைகளையும் மக்கள் பெரிதும் விரும்பிப் படித்தார்கள். புத்தக வெளியீட்டு நிலையங்கள் அவருடைய கதைகளை நான், நீ என்று முந்திக்கொண்டு வெளியிட்டன. அதற்காக அவருக்குப் பெரும் தொகையான பணமும் வழங்கின. புகழ் பெற்ற இந்த அறிஞரின் வரலாற்றை அறியவேண்டும் என்று பல பத்திரிகைகள் ஆவலாயிருந்தன. சில பத்திரிகை நிருபர்கள் அவரிடம் சென்று ''நீங்கள் இப்படித் திறமான பயன்தரக் கூடிய கதைகளை எழுத எப்படிக் கற்றுக் கொண்டீர்கள்'' என்று கேட்டனர்.



அவர்களைச் சத்தியமூர்த்தி நோக்கி, ''கற்பனைக்கதை எழுதும் என்னை, இப்போது என் சொந்தக் கதையையே கூறும்படி கேட்கிறீர்கள். என்னுடைய சொந்தக் கதையும் மக்களுக்கு ஒரு படிப்பினையாக இருக்கட்டும்.

எனக்குப் பன்னிரண்டு வயதாய் இருக்கும்போது என் தந்தை இறந்துவிட்டார். நானும் என் அம்மாவும் உற்றார் உறவினர்களால் ஒதுக்கப்பட்டோம். நாளாந்தம் எமது சீவியம் போவதே பெரும் கஷ்டமாக இருந்தது. என் அம்மா அக்கம் பக்கத்து வீடுகளில் வேலை செய்து கிடைத்த வருவாயில் எங்கள் வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. அப்போது நான் ஏழாம் வகுப்பிற் படித்துக் கொண்டிருந்தேன். பள்ளிக்கூடம் சென்று படிப்பதென்றால் எனக்கு மிகுந்த ஆசை. ஆனால் என் ஆசை நிறைவேறவில்லை. எதிர்பாராத விதமாக இருந்தாற்போல் ஒருநாள் என் அம்மாவின் கண்கள் இரண்டும் குருடாகிவிட்டன. அம்மா துடித்துப் பதறினாள். நான் அழுது புரண்டேன். வைத்தியர்கள் இனிமேல் அம்மாவின் கண்கள் பார்வை பெற மாட்டா என்று கூறிவிட்டனர்.

எமது நாளாந்தச் சீவியம் போவதற்கே வழியில்லாமற் போய்விட்டது. சும்மா இருந்தால் சோறு கிடைக்குமா? அம்மா பிச்சை எடுக்கப்போகிறேன் என்றாள். நான் உயிர்தான் போனாலும் அதற்கு இடம் தரேன் என்று மறுத்து விட்டேன். அப்போது நம்மிடம் இருந்த சிறிது பணத்தை எடுத்துக்கொண்டு பழைய புத்தகங்கள் வாங்கி விற்கும் முயற்சியில் ஈடுபட்டேன். காலை தொடக்கம் மாலைவரை ஊரூராக அலைந்து பழைய புத்தகங்களைச் சகாயவிலைக்கு வாங்குவேன். பின்னர் அவற்றைப் பட்டணத்தில் உள்ள புத்தகக் கடை ஒன்றில் சிறிது இலாபம் வைத்து விற்பேன். இதனால் நானும் என் அம்மாவும் சீவிப்பதற்கு ஓரளவு வருவாய் கிடைத்தது.

இரவு நேரங்களிலும், ஓய்வான காலங்களிலும் முதல்நாள் வாங்கி வந்த பழைய புத்தகங்களில் உள்ள சுவையான விடயங்களைப் படிப்பேன். ஒரு நாளாவது நான் புத்தகங்களைப் படியாதது கிடையாது. புத்தகக் கடைக்கு விற்பதற்கு முன், என்னிடம் வரும் புத்தகங்களை ஒன்றும் விடாமல் படித்து முடிக்கும் வழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டேன். சில நூல்களை என் அம்மாவுக்கும்



படித்துக் காட்டுவேன். அம்மா மிகுந்த ஆர்வத்தோடு கேட்டுக் கொண்டிருப்பார். இவ்வாறு ஓயாமல் நான் நூல்களைப் படிப்பதைக் கண்ட என் அம்மா, ''மகனே நீ ''ஓதுவ தொழியேல்'' என்ற ஔவையின் வாக்குப்படி நடக்கிறாய். உனக்கு நிச்சயம் இதனால் நன்மை கிடைக்கும்'' என்று சொல்லி என்னை ஊக்குவித்தார். நானும் இடைவிடாது பல நூல்களையும் படித்து வந்தேன்.

சில காலஞ்செல்ல எனக்கும் மற்றவர்களைப் போல எழுதவேண்டும் என்ற ஆசை பிறந்தது. ஆகவே சின்னச் சின்னக் கட்டுரைகளையும் கதைகளையும் எழுத ஆரம்பித்தேன். ஆரம்பத்தில் அவை தேடுவார் அற்றுக் கிடந்தன. பின்னர் சிறுகச் சிறுகப் பத்திரிகைகள் என் கதைகளைப் பிரசுரித்தன. அதைத் தொடர்ந்து புத்தக வெளியீட்டு நிலையங்களும் என் கதைகளைப் புத்தகங்களாக்கி எனக்குப் பணமும் தந்தன. நான் பழைய புத்தகங்களை வாங்கி விற்கும் வேலையை நிறுத்திவிட்டுப் புதுப் புத்தகங்கள் எழுதும் வேலையில் முழுநேரத்தையும் செலவு செய்து வருகிறேன். என் அம்மா கூறியது போல் ஔவையாரின் ''ஓதுவ தொழியேல்'' என்ற வாக்கின் நன்மை என் வாழ்க்கையில் தெட்டத் தெளிவாகிவிட்டது. நானும் என் அம்மாவும் தற்போது எதுவித குறையும் இல்லாமல் வாழ்கிறோம். இதுவே என் சொந்தக் கதை'' என்று கூறி முடித்தார் பிரபல எழுத்தாளர் சத்தியமூர்த்தி.

''ஓதுவ தொழியேல்''

# மாருட்டம்

கமலாவும், விமலாவும் ஒரே பாடசாலையில் படிக்கும் ஒரே வகுப்பு மாணவிகள். இருவரும் வசதியான குடும்பத்தில் பிறந்தவர்கள். ஆனால் இருவரும் ஒருவரில் ஒருவர் பொறாமையாக இருந்தார்கள். கமலா நல்ல உடை அணிந்தால், விமலாவுக்குப் பிடிக்காது. விமலா அதிக புள்ளிகள் எடுத்துவிட்டால் கமலாவுக்குப் பிடிக்காது. ஒருவரை ஒருவர் கிண்டலாகப் பேசி அடிக்கடி சண்டையிட்டுக் கொள்வார்கள். இவர்கள் தத்தமக்கு இருக்கும் வீடு, மோட்டார் வண்டி, ஆடை அலங்காரம் முதலியவற்றை ஒப்பிட்டு ஒருவரோடு ஒருவர் பொறாமையான வார்த்தைகளைப் பேசி வெறுப்பை வளர்த்துக் கொண்டார்கள். கல்வியில் அதிகம் அக்கறை காட்டுவதில்லை.

இவர்களுடைய வகுப்பில் செல்வி என்று ஒரு மாணவி படித்து வந்தாள். செல்வி வறிய குடும்பத்திற் பிறந்தவள். தான் எப்படியாவது படித்து முன்னேறித் தனது குடும்பத்தை நல்ல நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்று அவள் ஆசைப்பட்டாள். ஆசிரியர் சொல்லித் தருகின்ற பாடங்களைச் செல்வி அதிக கவனத்தோடு படிப்பாள். அதனால் அவளே வகுப்பில் அதிக திறமைசாலியாக இருந்தாள். அவளுடைய திறமையைக் கண்ட மற்ற மாணவிகள் அவளோடு மிகுந்த அன்பாகப் பழகினார்கள். எல்லோரும் செல்வியைத் தங்கள் சிநேகிதியாக்கிக் கொள்ள



வேண்டும் என்று ஆவலாய் இருந்தார்கள். செல்வியோ எல்லோருடனும் அன்பாகவும், பண்பாகவும் பழகி வந்தாள். தனிப்பட்ட எவரும் அவளுக்கு நெருங்கிய சிநேகிதி என்று சொல்வதற்கில்லாமல் நடந்துகொண்டாள்.

கமலாவும் விமலாவும் செல்வியைத் தங்கள் சிநேகிதியாக்கிக் கொள்ளப் பெரும் முயற்சிகள் எடுத்தனர். ஒவ்வொருவரும் செல்வியைத் தனியே சந்திக்கும் போதெல்லாம், அவளோடு மிகுந்த அன்பாகப் பேசுவார்கள். செல்விக்கு ''சொக்கிலேற்'' இனிப்பு முதலிய பொருட்களையும் கொடுக்க முன்வருவார்கள். இடையிடையே ஒருவரைப் பற்றி ஒருவர் பொறாமையான வார்த்தைகளையும் பேசுவார்கள். அந்த வேளைகளில் செல்வி மிகுந்த அமைதியாக இருந்துகொள்வாள். அவர்கள் கொடுக்கும் பொருட்களையும் வாங்க மறுத்து விடுவாள். ''ஔவியம் பேசேல்'' என்ற ஆத்திசூடி வசனம் உங்களுக்குத் தெரியாதா? ஒருவரைப் பற்றி ஒருவர் பொறாமையாகப் பேசிக்கொள்வது தவறு. அதனாலேதான் ஔவையார் பொறாமையான வார்த்தைகளைப் பேசாதீர்கள் என்று சொல்லியிருக்கிறார். நீங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பொறாமையாகப் பேசுவதை நிறுத்திக் கொண்டால்தான் நான் உங்களோடு சிநேகமாக இருப்பேன்'' என்று புத்திமதி சொல்வாள் செல்வி.

செல்வியின் இந்தப் போக்கு, கமலாவுக்கும் விமலாவுக்கும் பெரும் எரிச்சலை உண்டு பண்ணியது. செல்வியை ஏதேனும் சிக்கலில் மாட்டிவிடவேண்டும் என்று தமக்குள்ளே எண்ணிக் கொண்டனர். ஒரு நாள் கமலா விமலாவுடைய ஊற்றுப் பேனாவை அவளுக்குத் தெரியாமல் எடுத்துச் செல்வியின் புத்தகப் பெட்டியில் வைத்துவிட்டாள். அதே நாள் விமலா, கமலாவின் கத்தரிக்கோலைக் கமலாவுக்குத் தெரியாமல் எடுத்துச் செல்வியின் புத்தகப் பெட்டியில் வைத்துவிட்டாள் இருவரும் ஒருவருக்கொருவர் தெரியாமல் செல்வியில் திருட்டுப்பட்டம் கட்டவே இப்படிச் செய்தனர். இது செல்விக்குத் தெரியாது.

பாடசாலை முடிவடைவதற்குச் சற்று முன்பு கமலா தன்னுடைய ஊற்றுப் பேனாவை யாரோ எடுத்துவிட்டதை உணர்ந்தாள். அவ்வாறே விமலாவும் தன்னுடைய கத்தரிக்கோல் காணாமற் போய் விட்டதை அறிந்தாள். உடனே இருவரும் எழுந்து தங்கள் பொருட்கள் காணாமற் போய்விட்ட செய்தியை ஆசிரியருக்கு அறிவித்தனர். அப்போது ஆசிரியர் அவர்களைப் பார்த்து "நீங்கள் இருவரும் எப்போதும் ஏதாவது ஒரு குழப்பம் செய்யாமல் இருக்கமாட்டீர்கள். ஒருவருடைய பொருளை ஒருவர் திருடிக்கொண்டு சண்டை பிடிப்பீர்கள். எங்கே உங்கள் புத்தகப் பெட்டிகளைக் கொண்டு வாருங்கள் பார்ப்போம்" என்று கூறி அவர்களுடைய பெட்டிகளை நன்கு பார்வையிட்டார். அங்கே காணாமற்போன பொருட்கள் இருக்கவில்லை.

இதற்கிடையில் செல்வி எழுந்து "ரீச்சர் இந்தப் பேனாவும் கத்தரிக்கோலும் என்னுடைய புத்தகப்பெட்டியில் இருக்கின்றன. இவை எப்படி என் பெட்டிக்குள் வந்தன என்று எனக்குத் தெரியாது. நான் இவற்றை அவர்களுடைய பெட்டிகளில் இருந்து எடுக்கவில்லை" என்று பதறிப்போய்க் கூறினாள். கமலாவின் முகமும் விமலாவின் முகமும் வியர்க்க ஆரம்பித்துவிட்டன.

ஆசிரியருக்குச் செல்வியின் குணம் நன்றாகத் தெரியும். பொய் களவு முதலிய பழக்கங்கள் இல்லாதவள் செல்வி என்பது பாடசாலை முழுதும் அறிந்த உண்மை. எனவே இந்த ஒளித்து விளையாடும் சூழ்ச்சியைக் கமலாவும் விமலாவும்தான் செய்திருக்க வேண்டும் என்று ஆசிரியர் ஊகித்தார். அவர்கள் இருவரையும் தனித்தனியே கூப்பிட்டுக் கடுமையாக விசாரித்தார். அப்போது கமலாவும் விமலாவும் தாங்கள் செய்ததை ஒப்புக்கொண்டார்கள்.

"இருவருடைய பொறாமையான போக்கும், பேச்சும் அப்பாவியான இன்னும் ஒருவரையும் பாதிப்பதைப் பார்த்தீர்களா. இதனாற்தான் ஔவையார் "ஔவியம் பேசேல்" என்று கூறினார். நீங்கள் இனிமேல் பொறாமை



வார்த்தைகள் பேசி ஒருவருடன் ஒருவர் வெறுப்பாக இருக்கக் கூடாது. இப்போதே போய் செல்வியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுங்கள்" என்று புத்திமதி கூறினார் ஆசிரியர்.

கமலாவையும், விமலாவையும் வகுப்பு மாணவிகள் அனைவரும் வெறுப்போடு பார்த்தனர். வெட்கத்தால் அவர்கள் முகங்கள் வாடிச் சோர்ந்தன. செல்வியிடம் அவர்கள் இருவரும் மன்னிப்புக் கேட்க வந்தபோது அவள், "கவலைப்படாதீர்கள், இனியாவது ஒருவரோடு ஒருவர் அன்பாய் இருங்கள். அப்போதுதான் நான் உங்களுடைய உற்ற சிநேகிதியாய் இருப்பேன்" என்றாள்.

"ஔவியம் பேசேல்"

---

# விதை நெல்

வித்தூர் என்னும் ஊரிலே கூலவாணன் என்னும் ஒரு வியாபாரி இருந்தான். தானியங்களை வாங்கி விற்பது தான் அவன் தொழில். வித்தூரிலே தானியங்கள் விளைந்து அறுவடை நடக்கும் காலங்களில் மக்கள் தங்கள் அறுவடையைக் கூலவாணனிடம் விற்பார்கள். அவன் அவற்றை நன்றாக அளந்து, மூடைகளாகக் கட்டிச் சேகரித்து வைப்பான். பின்னர் தானியங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் அவற்றை மக்களுக்கு அதிக விலைக்கு விற்பான். அதிக விலைக்கு விற்பது மட்டும் அல்லாமல் தானியங்களின் அளவையும் குறைத்தே விற்பான்.


தானியங்களின் அளவைக் குறைப்பது தவறான செயல். அது தண்டனைக்குரிய குற்றமுமாகும். வியாபாரிகள் தானியங்களின் அளவையும், பொருட்களின் நிறையையும் குறைக்காமல் இருக்கவேண்டும் என்று வித்தூரின் அரசாங்கம் பல நடவடிக்கைகள் எடுத்திருந்தது. வியாபாரிகள் உபயோகிக்கும் அளவுகளும், நிறைகளும் சரியானவையா என்று பரிசோதித்து அவற்றில் அரசாங்க முத்திரையைப் பொறிப்பது வழக்கம். இப்படி அரசாங்க முத்திரை பொறிக்கப்பட்ட அளவுகளாலேயே வியாபாரிகள் பொருட்களை அளந்து விற்கவேண்டும்.

கூலவாணனிடமும் இப்படி அரசாங்க முத்திரைகள் பொறிக்கப்பட்ட அளவைகள் இருந்தன. ஆனால் அவன்



அவற்றைத் தானியங்கள் விற்கும்போது உபயோகிப்பதில்லை. தான் தானியங்களை வாங்கும் போது மட்டுமே அவற்றை உபயோகிப்பான். இதனால் அவன் வாங்குகின்ற தானியங்களின் அளவு சரியாக இருக்கும். ஆனால் தான் தானியங்களை மக்களுக்கு விற்கும்போது, அளவிற் குறைந்த வேறு அளவைகளை உபயோகிப்பான். அளவைக் குறைத்து விற்று அதிக இலாபம் பெறுவதே அவனுடைய நோக்கம்.

ஒருமுறை வித்தூரிலே விதை நெல்லுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. அப்போது கூலவாணனிடம் நிறைய விதைக்குத் தகுந்த நெல் இருந்தது. எனவே மக்கள் அவனிடம் விதை நெல்லுக்கு ஓடி வந்தார்கள். கூலவாணன் தன்னிடம் வந்தவர்களிடம் அதிக விலையும் பெற்றுக்கொண்டு அளவையும் குறைத்து அளந்து நெல்லை விற்றான். இப்படி விதை நெல்லை வாங்கியவர்கள் தமது நிலங்களில் அந்த நெல்லை விதைத்தனர். தங்களுடைய நிலங்களின் பரப்புக்கு ஏற்ற அளவு நெல்லையே அவர்கள் கூலவாணனிடம் விலைக்கு வாங்கினர். ஆனால் கூலவாணன் அளவைக் குறைத்து விட்டபடியால் விதை நிலங்களுக்கு விதைக்கப்பட்ட நெல் போதாமல் இருந்தது. இதனால் அந்தப் போகத்து அறுவடை மிகவும் குறைந்து போயிற்று. அறுவடை குறைந்ததைக் கண்ட மக்கள் கூலவாணன் தங்களுக்கு விதை நெல்லை அளவு குறைத்தே தந்திருக்கிறான் என்று ஊகித்துக்கொண்டனர்.



பலர் ஒன்று சேர்ந்து ''இவனுடைய துரோகச் செயலை அம்பலப்படுத்த வேண்டும்'' என்று தீர்மானித்தனர். இரகசியமாக அரசாங்க அதிகாரிகளிடம் சென்று முறையிட்டனர். அரசாங்க அதிகாரிகள் கூலவாணனுடைய வீட்டையும், வியாபார நிலையத்தையும் திடீர்ப்

பரிசோதனை செய்தனர். அப்போது அங்கே அரசாங்க முத்திரை இடப்படாத, அளவு குறைந்த அளவுகள் பல கண்டெடுக்கப்பட்டன. இந்தத் திடீர்ப் பரிசோதனையைக் கூலவாணன் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

தானியங்களை அளவு குறைத்து விற்றதாகக் கூலவாணன்மேல் வழக்குத் தொடரப்பட்டது. நீதி மன்றத்தில் கூலவாணனிடம் இருந்து கைப்பற்றப்பட்ட அளவிற் குறைந்த சுண்டு, கொத்து, பறை போன்ற அளவைகள் சாட்சியமாகச் சமர்ப்பிக்கப்பட்டன. மேலும் வித்தூரின் மக்களிற் பலரும் சாட்சியம் அளித்தனர்.


நீதிபதி வழக்கை விசாரித்து கூலவாணன் குற்றவாளி எனக் கண்டு கொண்டார். அவனுக்குப் பெரிய அபராதம் விதித்ததோடு, இனிமேல் அவன் தானியங்கள் விற்கும் வியாபாரஞ்செய்யக்கூடாது என்றும் உத்தரவிட்டார்.

''அஃகஞ் சுருக்கேல்'' என்று ஒளவையார் அன்று கூறிய அறிவுரையை மதித்து நடவாத கூலவாணன் தனது தொழிலையும் இழந்து அவமானமும் அடைந்தான். அஃகம் என்பது தானியங்கள். தானியங்களின் அளவைக் குறைத்து விற்பது பெருந் தவறு.

'' அஃகஞ் சுருக்கேல் ''

# கிளிக் குஞ்சு

பாஞ்சாலன் பாடசாலையில் இருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தான். அப்போது தெரு ஓரமாக நின்ற ஒரு பட்ட தென்னைமரத்தில் அவனுடைய பார்வை சென்றது. அந்தத் தென்னையின் உச்சிக்குக் கிட்டவாக ஒரு பொந்து இருந்தது. பட்ட மரங்களின் பொந்துகளிலே, கிளி, மயினு போன்ற பறவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் என்பது பாஞ்சாலனுக்குத் தெரியும். ஆகவே தான் பட்ட தென்னை



மரத்தைக் கண்டதும் அதிலே பொந்து இருக்கிறதா, பறவைக் குஞ்சுகள் இருக்கின்றனவா என்று அண்ணாந்து பார்த்தான்.

பாஞ்சாலன் அப்படிப் பார்த்துக் கொண்டு நின்ற போது அந்தமரத்திலே ஒரு பாம்பு வளைந்து வளைந்து ஏறிக்கொண்டிருந்தது. பாம்பு ஏறுவதைக் கண்ட பாஞ்சாலன் வியப்போடு பாம்பைக் கவனித்த வண்ணம் நின்றான். பாம்பு மெதுவாக மரத்தில் ஏறி மேலே இருந்த பொந்துக்குள் நுழைந்தது. பாம்பு மெதுவாகப் பொந்தில்

நுழைவது பார்க்க வேடிக்கையாக இருந்தது. பாம்பின் வால் பொந்திற் சென்று மறையும்வரை பாஞ்சாலன் பார்த்தவாறு நின்றான். பின்னர் ''அடடே இந்த மரப் பொந்தில் பறவைகள் இல்லை, பாம்புதான் இருக்கிறது'' என்று தனக்குள்ளே சொல்லியவாறு வீடு சென்றான்.

வீட்டுக்கு வந்ததும் வீட்டு முற்றத்தில் பாஞ்சாலனுடைய தம்பி பரமுவும் பக்கத்து வீட்டு அரியமும் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டான். பாஞ்சாலனுக்கு அரியனைப் பிடிக்காது. எந்த விளையாட்டிலும் அரியன் வெற்றிபெற்றுவிடுவான். அந்த ஊரில் உள்ள பட்ட மரங்களில் உள்ள பொந்துகளை எல்லாந் தடவிக் குருவிக் குஞ்சுகளையும், கிளிக் குஞ்சுகளையும் பிடித்து விடுவான். இதனால் பாஞ்சாலன் அரியனை வெறுத்தான்.

விளையாடிக் கொண்டிருந்த அரியனைக் கண்ட பாஞ்சாலன் ''அடே அரியா, செட்டி தோட்டத்திலே தெரு ஓரமாக ஒரு பட்ட தென்னை மரம் நிற்கிறது. அதிலே உள்ள பொந்திலே கிளிக்குஞ்சுகள் இருக்கின்றன. சிறகு முளைக்காத குஞ்சுகள். தாய் இரை கொடுக்கும் போது பார்த்தேன். அந்தக் குஞ்சுகளை நான்தான் பிடிப்பேன். நீ பிடிக்கக் கூடாது'' என்றான்.

''யார் முதலில் மரத்தில் ஏறிக் குஞ்சுகளைப் பிடிக்கிறார்களோ அவர்களுக்குத்தான் குஞ்சுகள் சொந்தம்'' என்று சொல்லியவாறு ஓட்டம் பிடித்தான் அரியம். அவனைத் தொடர்ந்து பரமுவும் ஓடினான். பட்டதென்னை மரத்தை அடைந்ததும் அரியம் மரத்தில் ஏற ஆயத்தமானான். அப்போது பரமு ''அரியா நீ எவ்வளவோ கிளிகள் பிடித்திருக்கிறாய். எங்கள் வீட்டில் ஒரு கிளிகூட இல்லை. நானே ஏறிக் குஞ்சுகளைப் பிடிக்கிறேன். எல்லாக் குஞ்சுகளையும் நீ எடுத்துக்கொள் ஆனால் எனக்கு ஒரு குஞ்சை மட்டும் தா'' என்று இரந்து கேட்டான். அரியம் பரமுவின் விருப்பத்துக்கு இணங்கினான்.



பரமு மெதுவாக மரத்தில் ஏறினான். மரம் காற்றிலே அசைந்தது. பரமுவுக்குப் பயமாக இருந்தது. ''பயப்பிடாமல் ஏறடா'' என்று கீழே நின்று சத்தமிட்டான் அரியம். பரமு மெதுவாக மேலே ஏறிப் பொந்துக்குள்ளே கையைவிட்டான். பொந்திலே இருந்த பாம்பு சீறி அவன் கையிற் கடித்தது. கையிலே ஏதோ கடிப்பதை உணர்ந்த பரமு ''விறுக்'' என்று கையைப் பொந்துக்கு வெளியே எடுத்தான். கையிலிருந்து இரத்தம் வடிந்தது. உடனே மெதுவாகக் கீழே இறங்கினான்.

பரமு இறங்குவதைப் பார்த்த அரியம் ''என்னடா குஞ்சுகள் இல்லையா? அல்லது கிளி கொத்தும் என்று பயந்து இறங்குகிறாயா'' என்று கேட்டான். பரமு எதுவும் பேசாமல் மரத்திலிருந்து இறங்கிக்கொண்டிருந்தான்.

கீழே வந்ததும் அரியத்திடம் கையைக் காட்டினான். ''ஐயையோ ஏதோ கடித்து விட்டதே'' என்று கத்தினான் அரியம். பரமுவுக்குத் தலை சுற்றியது. கால்கள் நடுங்கின. மெதுவாக நிலத்தில் படுத்துக் கொண்டான். அவன் கண்கள் இருண்டன. "பரமு! வாடா மெதுவாக வீட்டுக்குப் போவோம்'' என்றான் அரியம். பரமு வாய் பேசாது மயங்கிய நிலையில் இருந்தான்.

அரியம் ''ஐயோ ஓடிவாருங்கோ – ஓடிவாருங்கோ ஆபத்து'' என்று கத்தினான். அக்கம்பக்கத்தில் நின்றவர்கள் ஓடிவந்தார்கள். நடந்ததை அறிந்ததும், பரமுவுக்குப் பாம்பு தான் கடித்திருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டு, அவனை விஷகடி வைத்தியரிடம் கொண்டோடினார்கள். இந்தச் செய்தியை அறிந்த பரமுவின் பெற்றோரும், பாஞ்சாலனும் அழுது புலம்பிய வண்ணம் விஷகடி வைத்தியர் வீட்டுக்கு ஓடினார்கள்.

மயங்கிய நிலையிற் கிடந்த பரமுவைக் கண்டதும் பாஞ்சாலனுக்குத் துக்கம் பீறிட்டுக்கொண்டு வந்தது. தனது தம்பி இறக்கப் போகிறானே என்று ஏங்கினான்.

"ஐயோ நான்தான் பாவி. என்னுடைய கெடுபுத்தி தான் என் தம்பிக்கு இந்த நிலையைக் கொண்டு வந்தது. தென்னம் பொந்திலே பாம்பு நுழைந்ததை என் இரு கண்களாலும் கண்டேன். ஆனால் அரியனுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும் என்று நினைத்துப் பொந்தில் கிளிக் குஞ்சுகள் இருப்பதைக் கண்டேன் என்று பொய் சொன்னேன். கடவுளே என்னைத் தண்டித்துவிட்டார்" என்று நிலத்தில் வீழ்ந்து அழுதான். அங்கே நின்ற அனைவருக்கும் பெரும் பரிதாபமாக இருந்தது.

பரமுவின் விஷகடிக்கு வேண்டிய வைத்தியத்தைச் செய்து கொண்டிருந்த வைத்தியர் பாஞ்சாலனைப் பார்த்து "தம்பி கண்டொன்று சொல்லேல் என்று ஔவைப்பாட்டி இதற்காகத்தான் சொல்லி வைத்திருக்கிறார். கண்ணுற் கண்டதை விட்டு, வேறு திரித்துச் சொல்பவர்கள் நிச்சயம் துன்பப்படுவர். நீ இப்போது அழாதே. உன் தம்பிக்கு ஒரு வித மோசமும் வராது. இன்னும் சிறிது நேரத்தில் அவன் விழித்து எழுந்து விடுவான். அதற்கு வேண்டிய மருந்து நான் கொடுத்திருக்கிறேன். ஆனால் இனிமேல் ஒருபோதும் 'கண்டொன்று சொல்லேல்' என்ற வாக்கியத்தை மறவாதே" என்று அன்போடு கூறினார்.

"கண்டொன்று சொல்லேல்"

---

# மக்கள் தொழிற்சாலை

நாகர்புரி என்பது ஒரு பெரிய பட்டினம். அந்தப் பட்டினத்தில் நல்ல ஒரு துறைமுகம் இருந்தது. எனவே அங்கே இறக்குமதி ஏற்றுமதி வியாபாரம் நன்கு நடைபெற்றது. அப்பட்டினத்தில் பல தொழிற்சாலைகளும் இருந்தன. மக்கள் தொழிற்சாலை என்பது அங்கு இருந்த ஒரு பெரிய தொழிற்சாலை. இந்தத் தொழிற்சாலையில் பலவிதமான தொழில்களும் நடைபெற்றன. இரும்பு உருக்கு வேலை, மோட்டார் வண்டிகளின் பகுதிகள் தயாரிக்கும் வேலை, தளபாடங்கள் செய்யும் வேலை போன்ற பல வேலைகளும் அங்கு நடைபெற்று வந்தன. அந்தத் தொழிற்சாலையில் ஆயிரக் கணக்கான தொழிலாளிகள் வேலை பார்த்து வந்தனர்.

நல்லதம்பி என்பவர்தான் மக்கள் தொழிற்சாலையின் சொந்தக்காரர். சிறியதோர் இரும்புக்கடை வியாபாரம் ஆரம்பித்த நல்லதம்பி நாளடைவில் பெரிய தொழிற்சாலையின் சொந்தக்காரர் ஆகிவிட்டார். எல்லாம் அவருடைய விடாமுயற்சியால் வந்தவைதான். நல்லதம்பி காட்டூர் என்னும் கிராமத்தில் பிறந்தவர். சிறுவயதில் பண்பாளன் என்னும் ஆசிரியருடைய உதவியோடு கல்வி கற்றுவிட்டுப் பட்டணத்துக்கு வந்து வியாபாரத்தில் ஈடுபட்டார். இப்போது நல்லதம்பி பெரிய பணக்காரனாகி விட்டாலும், தனது ஊரையும் தனக்கு உதவிய ஆசிரியர் பண்பாளனையும் மறந்து விடவில்லை. வயதான நிலையில் இருக்கும் பண்பாளன் நன்கு வாழச் சகல வசதிகளும் செய்து கொடுத்தார் நல்லதம்பி.

தன்னுடைய இனத்தவர்களேயும், தனது ஊரிலே வேலேயில்லாமல் இருக்கும் இளேஞர்களேயும் பட்டணத்துக்கு அழைத்துவந்து தனது தொழிற்சாலேயிலே சேர்த்து ஏதாவது ஒரு வேலே பழக்கி அவர்களும் நல்ல முறையில் வாழ ஒழுங்குகள் செய்தார். இதனுல் காட்டூர் மக்கள் நல்லதம்பியைத் தெய்வமென மதித்தார்கள்.

ஆசிரியர் பண்பாளனும் தன்னுடைய பழைய மாணவனின் பண்பை எண்ணி மகிழ்ந்தார். ஒரு நாள் நல்லதம்பி காட்டூருக்குச் சென்றபோது தனது ஆசிரியருடைய வீட்டுக்குச் சென்று அவருடைய சுகம் விசாரித்தார். அப்போது ஆசிரியர் நல்லதம்பியை மெச்சிப் பேசினுர். ''நல்லதம்பி நீ 'ங' போன்றவன்'' என்ருர். நல்லதம்பிக்கு இது விளங்கவில்லே. அதை உணர்ந்த ஆசிரியர் ''நல்லதம்பி 'ங' என்ற எழுத்து ஒரு விசித்திரமான எழுத்து. அது வரும் சொற்கள் மிகவும் குறைவு. இங்ஙனம், அங்ஙனம், எங்ஙனம் போன்ற சொற்களில் மட்டுமே வரும். ஆனுல் அதனுடைய இனத்த எழுத்துகள் ஙா, ஙி, ஙீ, ஙு, ஙூ என்ற எழுத்துகள் எந்தச் சொல்லிலும் வருவதில்லே. இருந்தாலும் 'ங' என்ற எழுத்தின் தேவையைக் கருதி அரிச் சுவடியிலே 'ங' வோடு சேர்த்து மற்றப் பிரயோசனமில்லாத அதன் இனத்த எழுத்துக்களே எல்லாம் எழுதி வைத்திருக்கிருர்கள். இந்த 'ங' தான்மட்டும் பிரயோசனமாக இருந்து கொண்டு மற்ற இனத்த எழுத்துக்களே எல்லாம் சேர்த்துக் கொண்டு பெருமைப் படுத்துகிறது. அதனுற்தான் நானும் உன்னே 'ங' போன்றவன் என்றேன்'' என்று விளக்கிக் கூறினுர்.

நல்லதம்பிக்கு இதைக் கேட்கும்போது பெரிய மகிழ்ச்சியாக இருந்தது. தான் தன்னுடைய இனத்தவரையும் ஊரவரையும் அணேத்து நடப்பதனுற்தான் ஆசிரியர் இப்படிச் சொன்னுர் என்று அறிந்துகொண்டார்.

மேலும் ஆசிரியர் நல்லதம்பியைப் பார்த்து ''என் அன்புள்ள மாணவனே இதைத்தான் ஔவையார் ''ஙப் போல் வளே'' என்று கூறினுர். இந்த வாக்கியத்துக்கு எடுத்துக்காட்டாக நீ இருப்பது எனக்குப் பெருமையும் மகிழ்ச்சியும் தருகிறது. நீ நீடுழி வாழ்க'' என்று வாழ்த்தினுர்.

''ஙப்போல் வளே''


# இயந்திரக் கலப்பை

வயலூர் என்னும் கிராமத்தில் வேலுப்பிள்ளே என்ற ஒரு குடியானவன் இருந்தான். அவனிடம் சொந்தமான நிலபுலங்கள் இருக்கவில்லே. ஓரிணே மாடும், ஒரு கலப்பையும் மட்டுமே அவனிடம் இருந்தன. எனவே வேலுப்பிள்ளே தனது மாடுகளின் உதவியால் வயலூரில் உள்ளவர்களுடைய காணிகளே உழுது அதற்கான கூலியைப் பெற்றுத் தனது சீவியத்தை நடத்தி வந்தான்.

இவ்விதம் கூலிக்கு உழவுத் தொழில் செய்த வேலுப்பிள்ளே மிகவும் சிக்கனமாக வாழ்ந்து சிறுகச் சிறுகப் பணத்தைச் சேர்த்து வந்தான். சில காலஞ்செல்ல அவன், தான் சேர்த்த பணத்தைக் கொண்டு ஒரு இயந்திரக் கலப்பை வாங்கினுன். இயந்திரக் கலப்பை வயலூருக்குப் புதிதாக இருந்தபடியால், வயலூர் மக்கள் தங்கள் வயல்களே இயந்திரக்கலப்பையால் உழுவிக்கப் பெரிதும் விரும்பினர். இதனுல் வேலுப்பிள்ளேயின் இயந்திரக் கலப்பைக்கு ஓய்வில்லாத வேலேயாக இருந்தது. ஓயாமல் வேலே செய்தால் தனது இயந்திரக் கலப்பை விரைவிற் பழுதாகிவிடும் என்று வேலுப்பிள்ளே அஞ்சினுன்.

எனவே கிழமையில் ஒரு நாளேக்காவது இயந்திரக் கலப்பைக்கு ஓய்வு கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்தான். சனிக்கிழமைகள் தோறும் இயந்திரக் கலப்பையை வேலேயில் ஈடுபடுத்தாமல் அதைத் துடைத்து, நன்ருக

எண்ணெய் இட்டு வெய்யிற்படாத இடத்தில் நிறுத்தி வைப்பான். இவ்வளவு நாளும் ஓய்வு இல்லாமல் உழைத்த வேலுப்பிள்ளையின் இச் செயல் வயலூர் மக்களுக்குப் பெரும் வியப்பைத் தந்தது.



ஒரு நாள் வேலுப்பிள்ளை தன்னுடைய இயந்திரக் கலப்பையைக் கழுவித் துடைத்து, எண்ணெய் இட்டுக் கொண்டிருக்கும்போது அவ்வழியே ஒரு முதியவர் வந்தார். அந்த முதியவர் வேலுப்பிள்ளையை நோக்கி "என்ன வேலுப்பிள்ளை இயந்திரக் கலப்பைக்கு நீராட்டுகிறாயா?" என்று கேட்டார். அதற்கு வேலுப்பிள்ளை "ஐயா இயந்திரத்துக்கும் ஓய்வு வேண்டும் தானே. எண்ணெயிட்டுத் துடைத்துப் பேணினால்தானே பழுதுபடாமல் நெடு நாளைக்கு உழைக்கும்" என்று சொன்னான்.

முதியவர் உரத்துச் சிரித்தார். வேலுப்பிள்ளை ஆச்சரியத்தோடு "ஏன் சிரிக்கிறீர்கள் ஐயா" என்று கேட்டான். "தம்பி நானும் உன்னைப் பல நாட்களாக அவதானித்து வருகிறேன். நீ உன் சீவியத்தில் ஒரு நாளாவது ஓய்வு எடுத்ததை நான் காணவில்லை. தினமும் ஓய்வு ஒழிவு இல்லாமல் உழைத்து வருகிறாய். உனது உடலுக்கு ஓய்வு வேண்டாமா? இரும்பாற் செய்யப்பட்ட இயந்திரத்துக்கு ஓய்வு கொடுத்து, நீராட்டி எண்ணெயிடும்



நீ உன் உடலாகிய அருமையான இயந்திரத்துக்கும் ஓய்வு கொடுக்க வேண்டாமா?" என்று கேட்டார்.

இப்போதுதான் வேலுப்பிள்ளைக்குத் தன் பிழை விளங்கியது. சிலவேளைகளில் அடிக்கடி தனக்குத் தலையிடி வருவதும், உடம்பு நோவதும், ஓய்வில்லாத காரணத்தால்தான் என்று உணர்ந்தான். இந்தச் சிறு சிறு தொல்லைகளைத் தான் பொருட்படுத்தாது ஓய்வில்லாமல் உழைத்தது தவறு என்று எண்ணினான். முதியவருக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் மௌனமாக இருந்தான்.

வேலுப்பிள்ளையின் மௌனத்தைக் கண்ட முதியவர் "தம்பி! மனிதர்களுக்கும் வாரத்தில் ஒரு நாளைக்காவது ஓய்வு வேண்டும். அவர்களுடைய உடம்பு ஆரோக்கியமாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் ஔவையார் "சனி நீராடு" என்று சொல்லியிருக்கிறார். சனிக்கிழமைகள் தோறும் எண்ணெய் தேய்த்து நீரில் மூழ்கி எழுந்தால் உடலுக்கு உறுதியும், தேக சுகமும் கிடைக்கும் இதை நீ அறியவில்லையே" என்றார்.

உடனே வேலுப்பிள்ளை "ஐயா உங்கள் புத்திமதிக்கு என் நன்றி. இனிமேல்,எனது இயந்திரக் கலப்பைக்கு ஓய்வு கொடுக்கும் சனிக்கிழமைகளிலே நானும் எண்ணெய் தேய்த்து நீராடுவேன்" என்று அன்புடன் சொன்னான். முதியவர் "இன்றும் சனிக்கிழமைதான், சனி நீராடு" என்று சொல்லிக் கொண்டு தன் வழியே சென்றார்.

"சனி நீராடு"

# தீப்பெட்டி

தீப்பெட்டிக்குத் தட்டுப்பாடான காலம். கட்டுப்பாட்டு விலைக்குத் தீப்பெட்டி கிடைப்பது பெரும் அருமை. தீப்பெட்டித் தொழிற்சாலைகள் சில வேலைநிறுத்தம் செய்தமையால் தீப்பெட்டிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இருந்தாலும் சங்கக் கடைகளிலும், வேறு தனிப்பட்ட கடைகளிலும் விற்பனைக்குத் தீப்பெட்டிகள் இருந்தன. சங்கக் கடைகளில் ஒரு கூப்பன் அட்டைக்கு இத்தனை தீப்பெட்டிகள் என்ற முறையில் வழங்கப்பட்டன. தனிப்பட்ட கடைக்காரர்கள் தங்களுடைய வாடிக்கைக்காரர்களுக்கு இரண்டு மூன்று என்ற முறையில் விற்றார்கள்.

அன்று தங்கம்மா வீட்டில் ஒரு தீப்பெட்டிகூட இல்லை. கூப்பன் அட்டைக்கு வாங்கிய தீப்பெட்டிகளும் முடிந்துவிட்டன. நாளைக்கு அடுப்பு மூட்டுவதற்குக்கூட ஒரு நெருப்புக்குச்சிதானும் இல்லை. ''ஐயையோ நேரத்தோடு கவனிக்காமல் விட்டுவிட்டேனே'' என்று வருத்தப்பட்டாள் தங்கம்மா. மூத்த மகன் சுந்தரத்தைக் கூப்பிட்டு, ''வல்லிபுரம் கடைக்குப் போய் இரண்டு தீப்பெட்டிகள் வாங்கிவா. தீப்பெட்டிகள் இப்போ கிடைப்பது அரிது, நான் சொன்னேன் என்று சொல்லிக் கட்டாயம் வாங்கிவா'' என்று கூறிப் பணத்தைக் கொடுத்தாள். சுந்தரம் ஒரு துடுக்குப் பையன். எதற்கெடுத்தாலும் "வெடு, வெடு" என்று பேசுவான். பிறரோடு இனிமையாகப் பேசமாட்டான். ''காசைக் கொடுத்தால் தீப்பெட்டி தருவதற்கு



என்னவாம். கடைக்காரன் தராமல் விடமுடியுமா?'' என்று சொல்லிக்கொண்டு கடையை நோக்கி நடந்தான் சுந்தரம்.

அப்போது கடையிலே, வல்லிபுரம் இருக்கவில்லை. கடையிற் பொருட்கள் எடுத்துக் கொடுக்கும் பையன் காளிமுத்துதான் இருந்தான். காளிமுத்துவைக் கண்ட சுந்தரம் ''டேய் காளி இரண்டு நெருப்புப் பெட்டி எடு, நல்ல பெட்டியாய் பார்த்தெடு, நனைந்த பெட்டி கிட்டி தந்து விடாதே'' என்றான். காளிமுத்துவுக்குச் சுந்தரம் பேசிய விதம் பிடிக்கவில்லை. மேலும், "வந்து கேட்கும் எல்லோருக்கும் தீப்பெட்டியை விற்று விடாதே. வழக்கமாக வரும் ஆட்களுக்கு மட்டுந்தான் ஆளுக்கு ஒரு பெட்டி கொடு'' என்று முதலாளி அவனிடம் சொல்லியிருந்தார். எனவே காளிமுத்து ''தீப்பெட்டி இல்லைத் தம்பி'' என்றான்.

''டேய், ஏண்டா பொய் சொல்கிறாய். உங்களிடம் தீப்பெட்டியில்லாமல் வேறு யாரிடம் தீப்பெட்டி இருக்கும். தீப்பெட்டியை என்ன சும்மாவா கொடுக்கப்போகிறாய், காசுக்குத்தானே விற்கப்போகிறாய். எடடா இரண்டு தீப்பெட்டி அல்லா விட்டால் என்ன நடக்கும் தெரியுமா?'' என்று வெடு வெடென்று பேசினான் சுந்தரம். அப்போது முதலாளி வல்லிபுரம் அங்கே வந்தார். "தீப்பெட்டி கொடுக்காவிட்டால் என்ன செய்வாய் தம்பி'' சுந்தரத்தைக் கேட்டார். ''பொலீசைக் கூட்டிவருவேன். தீப்பெட்டிகளைப் பதுக்கி வைத்திருப்பதாக முறைப்பாடு செய்வேன். உன்னைப் பிடித்துக்கொடுப்பேன்'' என்று ஆத்திரத்தோடு சொன்னான் சுந்தரம்.

"ஓ அப்படியா? மெத்த நல்லது. போய் அப்படியே செய். தீப்பெட்டி தரமுடியாது'' என்று கடுமையான குரலிற் சொன்னார் வல்லிபுரம். சுந்தரம் நின்று பார்த்தான். தீப்பெட்டி, தீப்பெட்டி என்று மீண்டும், மீண்டும் கத்திப்பார்த்தான். வல்லிபுரம் அசையவில்லை. நின்று

அலுத்துப்போன சுந்தரம் வீடு நோக்கி நடந்தான். வீட்டுக்கு வந்ததும், ''அவங்கள் தீப்பெட்டி இல்லையாம்'' என்றவாறு தாயிடம் பணத்தை நீட்டினான். "நீ என்ன விதமாகக் கேட்டாயோ ஆருக்குத் தெரியும். நயமாகக் கேட்டால் வல்லிபுரம் ஒரு தீப்பெட்டி என்றாலும் தராமல் விடமாட்டார்'' என்று சொல்லி, இளையமகன் குமாரைக் கூப்பிட்டு ''வல்லிபுரம் கடைக்குப் போய் ஒரு தீப்பெட்டி என்றாலும் தரும்படி கேட்டு வாங்கி வா'' என்று பணத்தைக் கொடுத்து அனுப்பினாள் தங்கம்மா.



குமார் வல்லிபுரம் கடைக்கு வந்தபோது அங்கே வல்லிபுரம் இருந்தார். ''மாமா கோபிக்க வேண்டாமாம், நாளைக்கு அடுப்பு மூட்ட ஒரு நெருப்பு குச்சிகூட வீட்டில் இல்லையாம், தயவுசெய்து அம்மா ஒரு தீப்பெட்டி என்றாலும் வாங்கி வரட்டாம்'' என்று மிகவும் பணிவாக நயம்படக் கூறினான். அவனுடைய பேச்சைக் கேட்ட வல்லிபுரத்துக்கு ஒரே ஆனந்தம். "ஒருதாய் பெற்ற இரண்டு பிள்ளைகள். மூத்தவன் எப்படிப் பேசினான், இந்த இளையவன் எப்படிப் பேசுகிறான். இவன் அல்லவோ பிள்ளை'' என்று தனக்குள்ளே நினைத்துக் கொண்டார். மெதுவாக எழுந்து மறைவாக இருந்த தீப்பெட்டிகளிலே மூன்று பெட்டிகளை எடுத்து ''தம்பி இப்போது நெருப்புப் பெட்டிக்குத் தட்டுப்பாடு. இருந்தாலும் உனக்காக மூன்று பெட்டிகள் தருகிறேன் கொண்டு போய் அம்மாவிடம் கொடு. அத்தோடு இந்தத் துண்டையும் அம்மாவிடம் கொடு என்று சொல்லி மூன்று தீப்பெட்டிகளுக்கான கட்டுப்பாட்டு விலையைப் பெற்றுக் கொண்டு தீப்பெட்டிகளையும் ஏதோ எழுதப்பட்ட ஒரு கடதாசித் துண்டையும் கொடுத்தார்.



தீப்பெட்டிகளைப் பெற்ற குமார், "மெத்தப் பெரிய உபகாரம் மாமா'' என்று கூறிக்கொண்டு வீட்டுக்கு விரைந்தான்குமார். தீப்பெட்டிகளையும் கடதாசித் துண்டையும் பெற்ற தங்கம்மா துண்டில் எழுதியிருப்பதைப் படித்துப் பார்த்தாள். அதிலே ''ஞயம்பட வுரை'' என்று எழுதப் பட்டிருந்தது.

தங்கம்மாவுக்கு எல்லாம் விளங்கிவிட்டது. மூத்தமகன் சுந்தரம் நயமாக, இனிமையாகப் பேசவில்லை. அதனால் வல்லிபுரம் தீப்பெட்டிகளைக் கொடுக்கவில்லை. மிகுந்த இனிமையாகப் பேசியிருக்கிறான் இளையமகன் குமார். அதனால் அவனுக்கு ஒன்றுக்குப் பதில் மூன்று தீப்பெட்டிகளைக் கொடுத்திருக்கிறார் வல்லிபுரம் என்று அறிந்து கொண்டாள். உடனே சுந்தரத்தைக் கூப்பிட்டு ''இதோ பார்த்தாயா ஔவைப் பாட்டியின் ''ஞயம்பட வுரை'' என்ற புத்திமதியை உனக்கு அனுப்பியிருக்கிறார் வல்லிபுரம். இனிமேலாவது பிறருக்கு இனிமையுண்டாகும்படி பேசக் கற்றுக்கொள்'' என்றாள்.

''ஞயம்பட வுரை''

# வர்டகைக்காரர்

நாகலிங்கம் பெரிய உத்தியோகத்தர். பட்டணத்திலே குடும்பத்தோடு வாழ்ந்து வந்தார். பட்டணத்தில் வாடகைக்கு ஒரு பெரிய வீட்டை எடுத்துக் கொண்டு அந்த வீட்டில் தனது மனைவி மக்களோடு சீவித்தார். அவருடைய சொந்த ஊர் கோட்டூர். அங்கே அவருடைய வயதான தந்தையும் தாயும் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் ஆரம்பத்தில் வறியவர்களாக இருந்தபடியால் ஒருமண் வீட்டிலேயே வாழ்ந்து வந்தார்கள்.


தன்னுடைய பெற்றோருக்கு ஒரு பெரிய கல்வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்று நாகலிங்கம் விரும்பினார். அத்தோடு தான் ஓய்வு பெற்று ஊருக்குப் போகும் போது தனது குடும்பமும் வசதியாக இருக்க அந்த வீடு அமைய வேண்டும் என்று நினைத்தார். எனவே தனது சொந்த ஊரான கோட்டூரிலே பெரியதொரு கல் வீட்டைக்கட்ட ஒழுங்குகள் செய்தார் நாகலிங்கம்.

இரண்டு மாடிகள் கொண்ட அந்த வீட்டில் எட்டுப் பத்து அறைகளும் சமையலறை, மலசல கூடங்கள், குளிக்கும் அறைகள் முதலிய பல வசதிகளும் அமைந்திருந்தன. கிணற்றிலிருந்து நீரைக் குழாய் மூலம் பெறுதற்கான அமைப்புகளும் வைக்கப்பட்டன. இந்தப்



பெரிய வீட்டைக் கட்ட ஆயத்தங்கள் செய்யும் போது நாகலிங்கத்தின் தந்தையார் மகனுக்குச் சில ஆலோசனைகள் கூறினார்; "மகனே! இடம்பட வீடெடேல்" என்று ஔவையார் கூறியிருக்கிறார். தேவைக்கு அதிகமான அளவில் வீட்டைக் கட்டாதே என்பதுதான் அதன் பொருள். இரண்டுபேர் இருப்பதற்கு வேண்டிய ஒரு வீட்டுக்கு இத்தனை அறைகளும் தேவை இல்லை. அதுவும் போக இந்தப் பெரிய வீட்டைக் கூட்டித் துப்புரவு செய்து, விளக்கேற்றிப் பராமரிப்பதற்குக் குறைந்தது மூன்று நான்கு வேலையாட்கள் வேண்டும். வயதுபோன எங்களால் இந்தப் பெரிய வீட்டைப் பராமரிக்க முடியாது. ஆகவே ஒரு சிறிய வீடு நமக்குப் போதும். இப்போது நாம் வசிக்கும் மண்வீடே போதுமானது" என்று கூறினார்.

தந்தையின் இந்தப் புத்திமதியை நாகலிங்கம் கேட்கவில்லை. "எல்லா அறைகளையும் பூட்டி வைத்துவிட்டு இரண்டொரு அறைகளில் நீங்கள் வசிக்கலாம்" என்று கூறி அந்தப் பெரிய வீட்டைக் கட்டுவித்தார். அவருடைய பெற்றோரும் மறுக்க முடியாமல் அங்கு குடிபுகுந்து, கீழ் மாடியில் உள்ள இரண்டு மூன்று அறைகளை உபயோகித்து வந்தனர். சில காலஞ் சென்றபின் வீட்டின் பல பகுதிகளிலும் தூசு பிடிக்கத் தொடங்கியது. மூடப்பட்டிருந்த அறைகளிலே வௌவால்களும், எலிகளும் குடிகொண்டன.



இரவிலே வௌவால்கள் கடிபட்டன. மரநாய்கள் அறைகளிற் குதித்துக் குதித்து ஓடின. இது நாகலிங்கத்தின் பெற்றோர்களுக்குப் பெரும் தொல்லையாக இருந்தது. வயது

போன அவர்களால், அறைகளைத் திறந்து கூட்டவோ, விளக்கேற்றவோ முடியவில்லை.

இன்னுஞ் சிறிது காலஞ்செல்ல, எலிகளும், வௌவால் களும் நாகலிங்கத்தின் பெற்றோர் வசித்து வந்த அறை களுக்கே வந்து விட்டன. ஒருநாள் இரவு எலி ஒன்று நாகலிங்கத்தின் தாயின் காலிற் கடித்தும் விட்டது. இப்படியான தொல்லையைத் தாங்க முடியாத அவர்கள் அந்தப் பெரிய வீட்டை விட்டு வெளியேறினர். தமது பழைய மண் வீட்டுக்குச் சென்று அதைக் கூட்டிப் பெருக்கி ஒழுங்கு செய்து கொண்டு அதிலே வாழ்ந்து வரலாயினர்.

நகரத்தில் வாழ்ந்து வந்த நாகலிங்கத்துக்கு அன்று ஒரு கடிதம் வந்தது. கடிதத்தைப் பிரித்துப் பார்த்தார் நாகலிங்கம்;

அன்புள்ள மகனுக்கு ஆசீர்வாதம்,

''இடம்பட வீடெடேல்'' என்ற ஒளவைப்பிராட்டி யின் புத்திமதியை நீ கேட்கவில்லை. எம்மை உனது பெரிய வீட்டிலே வசிக்கச் செய்தாய். நகரத்தில் என்றால் அந்த வீட்டை வாடகைக்காவது கொடுக்கலாம். இந்தக் கிராமத்தில் யார் வாடகை தரப்போகிறார்கள். ஆனால் எலிகளும், மரநாய்களும், வௌவால்களும் உனது வீட்டில் எங்களோடு குடிபுகுந்து விட்டன. இந்த வாடகைக்காரர் கள் எம்மை வீட்டில் இருந்தே விரட்டி விட்டார்கள். நாம் எமது மண் வீட்டுக்கு வந்து விட்டோம்.

வாடகைக்காரரிடம் இருந்து உன்வீட்டை மீட்பதற்கு வேண்டிய ஒழுங்கைச்செய்.

இப்படிக்கு,
உன் அப்பா.

கடிதத்தைப் படித்த் நாகலிங்கம் தன் பிழையை உணர்ந்து கொண்டார்.

''இடம்பட வீடெடேல்''

# தொலைந்த முதல்

இரத்தினசிங்கன் பெரியதோர் இரத்தின வியாபாரி. மகேந்திரபுரியின் பிரதான வீதி ஒன்றில் அவனுடைய வியாபார நிலையம் இருந்தது. அவனிடம் பல விலை மதிக்க முடியாத இரத்தினங்கள் இருந்தன. அவன் மிகுந்த நேர்மை உள்ளவன். அதிக இலாபம் கருதாமல் நீதியான முறையில் வியாபாரஞ் செய்தான். இதனால் அவனுடைய புகழ் பிறதேசங்களிலும் பரவி வந்தது. பல பிற நாட்டு வியாபாரிகள் இரத்தினசிங்கனுடன் தொடர்பு கொண்டு பெரும் அளவில் வியாபாரஞ் செய்தனர்.



மகேந்திரபுரியின் அயல் நாடு உலுத்தர்புரி. உலுத்தர் புரியிலே சோரசிங்கன் என்னும் வேறு ஒரு இரத்தின வியாபாரி இருந்தான். அவன் இரத்தின சிங்கனுடைய

புகழைக் கேள்வியுற்றான். எப்படியாவது இரத்தினசிங்கனுடன் சிநேகிதம் பண்ணிக் கொண்டு அவனோடு வியாபாரஞ் செய்து பெரும் இலாபம் பெறவேண்டும் என்று நினைத்தான். எனவே மகேந்திரபுரிக்கு வந்து இரத்தின சிங்கனோடு தொடர்புகளை ஏற்படுத்தலானான்.

இரத்தினசிங்கன் இயல்பாகவே நல்ல குணம் படைத்தவன். எவரையும் ஆதரித்து நட்புக் கொண்டாடுபவன். அயல்நாட்டு வியாபாரியான சோரசிங்கனையும் மிகுந்த அன்போடு வரவேற்று, வியாபார கருமங்களைப் பேசினான். சோரசிங்கன் பேசுகின்ற விதத்தையும், அவன் நடை, உடை, பாவனை முதலியவற்றையும் பார்த்து இரத்தின சிங்கன் மயங்கிவிட்டான். அவன் ஒரு பெரிய உண்மையுள்ள வியாபாரி என்று எண்ணினான். ஆகவே சோர சிங்கன் நட்புக் கொள்வதற்குத் தகுந்தவன்தானா என்று விசாரித்து அறியாமலே அவனுடன் மிகுந்த நட்புப் பாராட்டினான். சோரசிங்கனுக்குக் கடன் முறையில் இரத்தினங்களை விற்றும் வந்தான். இரண்டு, மூன்று தடவைகளில் சோரசிங்கன் சொன்னபடியே இரத்தினங்களைத் தன் நாட்டில் விற்றுப் பணத்தை உரிய காலத்தில் இரத்தின சிங்கனிடம் சேர்ப்பித்தான். இதனால் இரத்தின சிங்கனுக்குச் சோரசிங்கனிடம் பெரும் நம்பிக்கை ஏற்பட்டது. அவன் நல்ல நண்பன் என்று திடமாக எண்ணினான்.

ஆனால் இரத்தினசிங்கனிடம் நெடுங்காலமாக வேலை பார்த்து வந்த கணக்கப்பிள்ளை கந்தையாவுக்குச் சோர சிங்கன்மேல் நம்பிக்கை ஏற்படவில்லை. அவனுடைய நட்புத் தனது முதலாளிக்கு உகந்தது அல்ல என்று கருதினான். வயதில் மூத்தவனான கந்தையா இரத்தினசிங்கனோடு மிகுந்த உரிமையோடு பேசிப் பழகுவது வழக்கம். ஒரு நாள் கணக்கப்பிள்ளை இரத்தினசிங்கனை நோக்கி ''முதலாளி எனக்கென்னவோ உங்கள் புதிய நட்புப் பிடிக்கவில்லை. 'இணக்கமறிந் திணங்கு' என்று தமிழ் மூதாட்டி ஒளவையார் கூறியிருக்கிறார். ஒருவரோடு நட்புக் கொள்ளும் போது அவருடைய நற்குண, நற்செயல்களை ஆராய்ந்து அறிந்த பின்தான் நட்புக்கொள்ள வேண்டும் என்பது ஒளவையின் வாக்கு. இந்தச் சோரசிங்கனுடைய குணாதிசயங்கள் நமக்கு ஒன்றும் தெரியாது. நீங்கள் அவனோடு மிகுந்த நட்பாக இருக்கிறீர்கள். அதுவுமல்லாமல் கடன் முறையில் வியாபாரமும் செய்கிறீர்கள். இது எப்படியாகுமோ எனக்குத் தெரியாது. நமது முதல் தொலையாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று மிகவும் நயமாகக் கூறினான்.



இரத்தினசிங்கன், கணக்கப்பிள்ளையைப் பார்த்துச் சிரித்தான். ''உமக்கு எல்லோரிடமும் அவநம்பிக்கைதான். சோரசிங்கன் நல்லவன். நீர் சென்று உமது வேலைகளைக் கவனியும்'' என்றான். இதன் பின்னர் கணக்கப்பிள்ளை இதுபற்றி எதுவுமே பேசவில்லை. சிலகாலஞ் சென்றது. இரத்தினசிங்கன் – சோரசிங்கன் வியாபாரமும் நன்கு நடந்து வந்தது.

திடீர் என்று ஒரு நாள் சோரசிங்கன் இரத்தினசிங்கனிடம் வந்தான். ''நண்பா எனது நாட்டிலே பெரிய பணக்காரர் ஒருவர் இருக்கிறார். அவருடைய மகளுக்கு விரைவிற் திருமணம் நடக்கப் போகிறது. அதற்காக அவர் விலையுயர்ந்த இரத்தினங்களை வாங்க விரும்புகிறார். உன்னிடம் உள்ள அதிவிலைஉயர்ந்த இரத்தினங்களைத் தந்தால், நான் அந்தத் தனவந்தனிடம் அவற்றைக் காட்டி அவன் விரும்பியவற்றை விற்றுவிட்டுப் பணத்தையும் மீதியாக உள்ள இரத்தினங்களையும் திருப்பி இரண்டு நாட்களில் கொண்டு வந்து தருகிறேன்.'' என்றான்.

இரத்தினசிங்கனுக்கு நண்பன் கூறுவது உண்மை என்று தோன்றியது. அதுவுமல்லாமல் பெரிய வியாபாரமும் நடைபெறுகிறதே என்றும் எண்ணினான். எனவே தன்னிடமுள்ள அதிக விலை உயர்ந்த இரத்தினங்கள் பலவற்றை

சோரசிங்கனிடம் கொடுத்தனுப்பினான். சோரசிங்கன் இரத்தினங்களைப் பெற்றுக்கொண்டு சென்று இரு வாரங்களாகியும் அவன் திரும்பி மகேந்திரபுரிக்கு வரவில்லை. இது இரத்தினசிங்கனுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்தது. உடனே அவன் கணக்கப்பிள்ளை கந்தையாவை அழைத்து உலுத்தர்புரிக்குச் சென்று சோரசிங்கனைச் சந்தித்து வரும்படி அனுப்பினான்.

கணக்கப்பிள்ளை உலுத்தர்புரிக்குச் சென்று விசாரித்தபோது சோரசிங்கன், நாணயம் இல்லாதவன் என்றும் அவன் இப்போது அந்த நாட்டில் இல்லை என்றும் அறிந்தான். சோரசிங்கன் எங்கு சென்றான் என்பதை அறிய முடியாத கணக்கப்பிள்ளை மகேந்திரபுரிக்குத் திரும்பினான். கணக்கப்பிள்ளை கொண்டுவந்த செய்தியை அறிந்த இரத்தினசிங்கன், "இணக்கம் அறிந்து இணங்கு" என்னும் ஔவைப் பாட்டியின் அறிவுரையை மதியாமல் நடந்ததற்கு, நல்ல தண்டனை பெற்று விட்டதாகக் கூறி மனம் வருந்தினான்.

"இணக்கமறிந் திணங்கு"

# கெட்ட குமாரன்

சின்னத்தம்பிக்கும் சீதேவிப்பிள்ளைக்கும் இரண்டு மக்கள் இருந்தனர். மூத்தவன் பெயர் மதுபாலன், இளையவன் பெயர் குணபாலன். சின்னத்தம்பி தனக்குச் சொந்தமான நிலத்தில் விவசாயஞ் செய்து குடும்பத்தை நடத்தினார். எப்படியாவது தனது மக்கள் இருவரையும் படிக்க வைத்து ஏதாவது உத்தியோகத்தில் அமர்த்தி விடவேண்டும் என்பதே சின்னத்தம்பியின் ஆசை. ஆனால் மக்கள் இருவரையும் படிக்க வைக்க அவரிடம் பணம் இருக்கவில்லை. ஆகவே தனது மூத்த மகன் மதுபாலனை மட்டும் மேற்படிப்புக்கு அனுப்பி வைத்தார். இளைய மகன் குணபாலனை ஓரளவு படிக்க வைத்துவிட்டுப் பின் நிறுத்திக் கொண்டார். குணபாலன் தகப்பனோடு விவசாயத்தைக் கவனித்து வந்தான்.

மதுபாலன் படித்துப் பட்டம் பெற்றான். அவனுக்குப் பட்டணத்தில் ஓர் அரசாங்க உத்தியோகமும் கிடைத்தது. உத்தியோகம் பார்க்கப் பட்டணம் சென்ற மதுபாலன் கூடா நண்பர்களுடன் சேர்ந்து கெட்டுப் போனான். குடிப்பழக்கம் பழகிப் பலரும் வெறுக்கக்கூடிய நிலையை அடைந்தான். தனது பெற்றோரையும், தம்பியையும் மறந்தான். அவர்கள் இருக்கிறார்களா, அல்லது இறந்து விட்டார்களா என்றுகூட நினைப்பதில்லை. வயதான சின்னத்தம்பியும், சீதேவிப்பிள்ளையும் மூத்த மகனின் இந்த நிலையைக் கேள்விப்பட்டுப் பெரிதும் வருந்தினர். அவர்கள் அனுப்பிய கடிதங்களுக்கு மதுபாலன் பதிலே போடுவதில்லை.

இளையமகன் குணபாலன் தனிமையாக விவசாயஞ் செய்து தனது தந்தையையும் தாயையும் பேணிக் காப்பாற்றி வந்தான். அவர்களுக்கு ஒருவித குறையும் வைக்காது கவனித்து வந்தான். ஆனால் அவனுக்கு விவசாயத்திற் கிடைத்த வருமானம் பற்றாக் குறையாக இருந்தது. அதிக நிலம் இல்லாதபடியால் குணபாலன் நாளாந்த சீவியத்துக்குக் கஷ்டப்பட்டான். அவனுடைய கஷ்டத்தைப் பார்த்த சின்னத்தம்பி ‘‘மகனே நானும் உன்னோடுகூட உழைக்க முடியாத நிலைக்கு வந்துவிட்டேன். நீயோ தனிமையாகப் பாடுபட்டு என்னையும் உன் அம்மாவையும் காப்பாற்றுகிறாய். ‘‘தந்தைதாய் பேண்’’ என்ற ஔவையின் ஆத்திசூடி வாக்கியத்துக்கு ஏற்ப நடக்கிறாய். உன் அண்ணனோ நாம் செய்த நன்றியை எல்லாம் மறந்து எங்களைக் கவனிக்காமல் இருக்கிறான். அவனுக்கு எப்போதுதான் புத்தி வருமோ நான் அறியேன்’’ என்று மனவருத்தத்துடன் கூறினார்.

தந்தையின் சொற்களைக் கேட்ட குணபாலன் ‘‘அப்பா ஒருவன் தன்னுடைய தந்தையையும், தாயையும் பேணிக் காப்பாற்றுவது அவனுடைய கடமை. அதைத்தான் நான் செய்கிறேன். அண்ணா தனது கடமையை மறந்து வாழ்கிறார். அவர் என்றைக்காவது திருந்தி நம்மிடம் வருவார். நீங்கள் கலங்க வேண்டாம்’’ என்று ஆறுதல் கூறினான்.

தன்னுடைய இளைய மகனின் நெருக்கடி நிலைமை நீங்கவேண்டும் என்று சின்னத்தம்பி ஆசைப்பட்டார். அதற்காக அவர் தன்கைக்கு வரும்பணத்தில் மிச்சம்பிடித்து அடிக்கடி தேசிய லொத்தர்ச் சீட்டு வாங்குவார். ஒரு நாள் அவருடைய சீட்டுக்கு முதற்பரிசு கிடைத்தது. சின்னத்தம்பியும் சீதேவிப்பிள்ளையும் ஆனந்தக் கூத்தாடினார்கள். பரிசுத் தொகையை எடுத்து இளையமகன் குணபாலனுக்கு வேண்டிய வசதிகளைச் செய்ய ஒழுங்குகள் செய்தார்கள்.

சின்னத்தம்பிக்கு முதற் பரிசு கிடைத்த செய்தியைத் தினசரிப் பத்திரிகையிற் பார்த்தான் மதுபாலன். தந்தையிடம் போய் தனக்கு உதவி செய்யும்படி கேட்க எண்ணினான். ஆனால் அவனுடைய மனச்சாட்சி குத்தியது. ‘‘நல்லாய் இருக்கும்போது தந்தை தாயைக் கவனியாமல்



இருந்து விட்டு இப்போது உத்தியோகமும் இல்லாமல் தெருத்தெருவாய் அலையும் நேரத்திற் தானா பெற்றாரை நினைக்கிறாய்’’ என்று அவன் மனம் அவனோடு பேசியது.

இருந்தாலும் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு மதுபாலன் தந்தையிடம் சென்றான். மதுபாலனைக் கண்ட சீதேவிப்பிள்ளையும், தம்பி குணபாலனும் பெரிதும் வருத்தப்பட்டார்கள். அழுக்குப் படிந்த மேனியும், கந்தல் உடையோடும் வந்த அவனுடைய தோற்றம் அவர்களை நெகிழ வைத்துவிட்டது. ஆனால் சின்னத்தம்பியோ மிகுந்த வைராக்கியத்தோடு இருந்தார். ‘‘மதுபாலா எனக்குப்பணம் வந்துவிட்டதை அறிந்து. இப்போது உறவு கொண்டாட வருகிறாய். உனக்குத் தந்தை, தாய், சகோதரன் பெரிதா அல்லது பணம் பெரிதா? நீ கெட்டவன், உனக்கு நான் ஒரு சதங்கூடத் தரமாட்டேன்’’ என்று கண்டிப்பாகக் கூறினார்.

‘‘அப்பா நான் கெட்டவன், துரோகி. ‘‘தந்தைதாய் பேண்’’ என்ற வாக்கை மறந்தவன். ஆனால் இப்போது திருந்தி விட்டேன். எனக்கு உத்தியோகம் இல்லை. உண்ண உணவில்லை, பிச்சைக்காரனாக அலைகிறேன். என்னை மன்னியுங்கள். நான் இனிமேல் உங்கள் காலடியிலே கிடக்கிறேன். நீங்கள் சொல்லுகிறபடி கேட்டு நடக்கிறேன்’’ என்று அழுதான்.

சின்னத்தம்பி மௌனமாக இருந்தார். சீதேவிப்பிள்ளை செய்வதறியாது கண்கலங்கி நின்றாள். அப்போது குணபாலன் ‘‘அப்பா எனக்காக அண்ணாவை மன்னித்து விடுங்கள். அவர் திருந்திவிட்டேன் என்றபின் அவரைத் தண்டிக்கக் கூடாது’’ என்று இரந்தான். தாங்கள் பணமில்லாது இருந்தபோதும், தம்மைப் பேணிக் காப்பாற்றிய அன்பு மகன் குணபாலன் சொன்னதைத் தட்டி நடக்கச் சின்னத்தம்பிக்கு மனம் வரவில்லை. ‘‘சரி சரி, உன் விருப்பம். ஆனால் உணவும், உடையும் அன்றி வேறெதுவும் அவனுக்குக் கிடையாது என்பதை மறந்து விடாதீர்கள்’’ என்று கண்டிப்பாகக் கூறினார் சின்னத்தம்பி.

‘‘தந்தைதாய் பேண்’’

# முடிச்சு மாறிகள்

முருகேசுச் சட்டம்பியார் அன்றுதான் முதன் முதலாகப் பட்டணத்துக்கு வந்தார். ஓய்வு பெற்ற அவர் பட்டணத்தில் வசிக்கும் தனது மகளின் குடும்பத்தைப் பார்த்துப் போவதற்காக வந்திருந்தார். பட்டணத்தின் பிரதான புகையிரத நிலையத்திற் சந்திக்கும்படி அவர் மகளுக்கு அனுப்பிய கடிதம் அவளுக்குக் கிடைக்கவில்லை. அதிகாலை பிரதான புகையிரத நிலையத்தில் வந்து இறங்கிய முருகேசுச் சட்டம்பியார் அங்கும் இங்கும் பார்த்தார். சனக் கூட்டம் அதிகமாக இருந்தது. அங்கே தனது மகளையோ, மருமகனையோ கண்டுகொள்ள முடியவில்லை.

புகையிரதத்தில் வந்தவர்கள் அனைவரும் நிலையத்தை விட்டு வெளியேறி விட்டனர். முருகேசுச் சட்டம்பியாரும் அங்குமிங்கும் பார்த்துப் பார்த்து, நிலையத்துக்கு வெளியே வந்தார். வெகுநேரமாகியும் அவரைக் கூட்டிப்போக எவரும் வரவில்லை. அவருக்கு மகள் இருக்கும் வீட்டுக்குப் போகும் வழி தெரியாது. மகளுடைய வீடு பத்துப் பதினைந்து மைல் தொலைவில் இருந்தது. முருகேசுச் சட்டம்பியாருடைய கைகளிலே 'சூட்கேசும்' வேறு பல பொருட்களும் இருந்தன. அவரைப் பார்க்கும்போது எங்கோ நாட்டுப்புறத்து மனிதர் முதன் முதலாகப் பட்டணத்துக்கு வந்திருக்கிறார் என்று தெரிந்து கொள்ளலாம். சட்டம்பியார் தனது சட்டைப் பையில் இருந்த மகளின் விலாசம் எழுதப்பட்ட துண்டை எடுத்துக் கையில் வைத்



துக் கொண்டார். அங்கே நின்ற ஒருவரிடம் அத்துண்டைக் காட்டி அந்த இடத்துக்குப் போகும் பஸ்வண்டி எது என்று கேட்டார். அந்த மனிதன் சொன்ன இலக்க பஸ்வண்டி நிற்பாட்டும் பஸ் நிலையத்துக்கு மெதுவாக நடந்து சென்று பஸ்வண்டியிலே ஏறுவதற்கு முயற்சி செய்தார். பஸ் வண்டிகள் மிகுந்த நெருக்கமாக ஆட்களை ஏற்றி வந்தன. மேலும் அவற்றில் ஏறிக்கொள்ள மக்கள் முட்டி மோதினர்.

சனக்கூட்டத்திலே இருகைகளிலும் பொருட்களையுங் கொண்டு பஸ்வண்டியில் ஏறுவதற்கு மூன்று, நான்கு முறை எத்தனித்தார் சட்டம்பியார். ஆனால் அவரால் முடியவில்லை. சற்று விலகிநின்று தான் கையில் வைத்திருந்த பொருட்களை நிலத்தில் வைத்து விட்டுத் தன் சட்டைப் பையைத் தட்டிப்பார்த்தார். பாவம்! அவருடைய 'மணி பேர்சைக்' காணவில்லை. சட்டம்பியார் திகைத்தார். அவரிடம் வேறுபணமோ கிடையாது. அப்பொழுதுதான் அவருக்குப் பட்டணத்தில் முடிச்சு மாறிகள் அதிகம் என்பது நினைவுக்கு வந்தது. இப்போது என்ன செய்வதென்று அவருக்குப் புரியவில்லை. யாரைப் பார்த்தாலும் வேற்று முகமாக இருந்தது.

"என்னுடைய 'மணிப் பேர்சைத்' தட்டிக் கொண்டு போய்விட்டார்கள். எனக்குப் பஸ்சுக்குப் பணம் தாருங்கள்" என்று பிறரிடம் கேட்க அவருக்கு வெட்கமாக இருந்தது. எனவே செய்வதறியாது வீதியின் ஒருபுறமாக நின்று தயங்கினார் சட்டம்பியார். அப்போது ஒரு பெரிய மோட்டார் வண்டி அவர்முன் வந்து நின்றது. அதிலிருந்து, கோட்டும் சூட்டும் அணிந்த ஒரு மனிதர் இறங்கினார். "எங்கே போகிறீர்கள் சேர், வாருங்கள் என் காரில் கொண்டு போய் விடுகிறேன்" என்றார் அவர். சட்டம்பியாருக்கு பெரும் வியப்பாக இருந்தது. முன் பின் தெரியாத இவர் யார் என்று எண்ணினார். அப்போது "என்ன சேர், யோசிக்கிறீர்கள் என்னைத் தெரியவில்லையா?

நான் உங்கள் பழைய மாணவன் பாலசிங்கம். எனக்குக் கணக்குப் பாடம் சரியாக வருவதில்லை என்று பாடசாலை முடிந்தபின் தனிமையாக வைத்துச் சொல்லித் தருவீர்களே அந்தப் பாலசிங்கந்தான்'' என்றார் அந்த மனிதர்.

''அடடே எங்கள் பாலசிங்கமா? ஆளே மாறிவிட்டாய் அடையாளமே கண்டு கொள்ள முடியவில்லை'' என்று ஆரம்பித்துத் தன் கதையைக் கூறிமுடித்தார் சட்டம்பி யார். பாலசிங்கம் சட்டம்பியாரைத் தனது மோட்டார் வண்டியில் ஏற்றிக்கொண்டு அவருடைய மகளுடைய வீட்டு விலாசத்தை தேடிப் புறப்பட்டார். செல்லும் வழியிலே தனது ஒரே மகன் வீட்டை விட்டு ஓடிவிட்ட தாயும், தான் தேடி அலைவதாயும் சொன்னார். சட்டம் பியார் வருத்தப்பட்டார். பாலசிங்கம் சட்டம்பியாருடைய மகளுடைய வீட்டு வாசலில் மோட்டார் வண்டியை நிறுத்தினார். வீடு பூட்டி இருந்தது. அக்கம் பக்கத்தில் விசாரித்தபோது அவர்கள் இருபத்தைந்துமைல் தொலை வில் உள்ள ஒரு கோவிலுக்குச் சென்று விட்டதாக அறிவித்தனர். திரும்புவதற்கு மாலையாகும் என்றும் கூறினார்கள்.

பாலசிங்கத்துக்குச் சட்டம்பியாரை அங்குவிட்டுச் செல்ல மனமில்லை. மோட்டாரை அந்தக் கோவிலை நோக்கி ஓட்டினார். அவருடைய பெருந்தன்மையை உணர்ந்த சட்டம்பியார் ''தம்பி! நீ எனக்காக எவ்வளவு கஷ்டப்படுகிறாய். உன் மகனையும் தேடாமல் என்னை என் மகளிடம் சேர்க்கப் பாடுபடுகிறாய்'' என்றார். ''சேர் நீங்கள் எனக்குச் செய்த நன்றியை நான் மறக்க முடியுமா? நீங்கள் தானே நன்றி மறவேல் என்று ஆத்தி சூடி படிப்பித்துத் தந்திருக்கிறீர்கள்'' என்று சிரித்தவண் ணம் சொன்னார் பாலசிங்கம்.

கோவிலை வந்தடைந்ததும், பாலசிங்கமும் சட்டம்பி யாரும் தேடிப் பார்த்தார்கள். அங்கே ஒரு மரநிழலில்



சட்டம்பியாரின் மகளும் குடும்பமும் அமர்ந்திருப்பதைக் கண்டார்கள். கிட்டச்சென்று பார்த்தார்கள். என்னே ஆச்சரியம். பாலசிங்கத்துடைய மகன் ஈசனும் அவர்க ளோடு இருந்து கடலை கொறித்துக் கொண்டிருந்தான்.

எல்லோருக்கும் ஒரே வியப்பாக இருந்தது. ஒருவரை ஒருவர் எதிர்பார்க்கவில்லை. எங்கோ அலைந்து திரிந்த ஈசன் கடைசியாகக் கோவிலுக்கு வந்திருக்கிறான். அப் போது சட்டம்பியாருடைய மகளின் குடும்பத்தினரைச் சந் தித்திருக்கிறான். அவர்கள் அவனுக்குப் புத்திமதி கூறிவீட்டுக் குப் போகும்படி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று பாலசிங்கம் அவர்களிடமிருந்து தெரிந்து கொண்டார். சட்டம்பியார் ஈசனைப் பார்த்து ''தம்பி! அம்மா, அப்பா உன்னைக் கண்டிப்பது உனது நன்மைக்காகத்தான். அவர் கள் உனக்குச் செய்யும் நன்றியை மறந்து நீர் அவர்களை விட்டு ஓடக் கூடாது. இதோ பார் உனது அப்பா நான் செய்த நன்றியை மறவாமல் எனக்கு உதவினார். அதன் பயனாகக் காணாமற் போன உன்னையும் கண்டுபிடித்துவிட் டார். ஆகவே நாம் எல்லோரும் 'நன்றி மறவேல்' என்ற வாக்குப்படி வாழவேண்டும்'' என்று கூறினார்.

பின்னர் அனைவரும் சுவாமி தரிசனம் செய்துகொண்டு மோட்டார் வண்டியில் வீடு திரும்பினர்.

''நன்றி மறவேல்''

# ஆசிரியரின் பிறநூல்கள்

## வெளிவந்தவை

★ குறளும் கதையும் 1973
(சிறுகதைத் தொகுதி)

★★ பாட்டும் கதையும் 1974
(கதைப்பாடல்கள்)

★★★ முனியன் முரளிகானனன் 1977
(குறுநாவல்)

## வெளிவர உள்ளவை

★ உடைந்த உள்ளம் (அச்சில்)
(நாவல்) - நட்சத்திரமாமா தொகுதிப் பிரசுரம்.

★★ திருவிழா
(நாவல்)

★★★ வள்ளுவர் சொன்னவை
(திருக்குறள் விளக்கச் சித்திரம்)

குறிப்பு:- இந்நூலாசிரியரின் நூல்கள் அனைத்தும் சிறுவர்களுக்கு உரியனவே.

## இந்நூலைப்பற்றி.....

● ஔவைப் பிராட்டியின் ஆத்திசூடியை இன்றைய பெரியவர்களே புரிந்து கொள்வார்களோ என்பது சந்தேகந்தான். இரத்தினச் சுருக்கமாக ஔவைப் பாட்டி பாடிய ஆத்திசூடியை இருபதாம் நூற்றாண்டுச் சிறுவர்களுக்கு விளங்கப்படுத்திப் புரியவைப்பது ஒரு சாதனைதான். இப்பெருஞ் சாதனையைச் சிறப்பாகச் செய்துள்ளார் நண்பர் நா. மகேசன் அவர்கள். இன்றைய சிறுவர்களுக்கு ஏற்ற முறையில் நவீன கதைகளைச் சொல்லி, அவற்றினூடே ஔவையின் ஆத்திசூடியை அழகுற இழையோட விட்டுள்ளார் ஆசிரியர்.

—அருட்திரு. சா. ம. செல்வரட்னம், அ.ம.தி.
(கரவையூர்ச் செல்வம்)

● ஔவைப் பிராட்டியின் ஆத்திசூடி ஓர் அறிவுச் சுரங்கம். அதன் ஒவ்வொரு வாக்கியமும் அறநெறிப் பொக்கிஷம். அந்தப் பொக்கிஷங்களைப் பலரும் நெருங்கி அனுபவித்துப் பயன் பெறுவதற்கு இலகுவான வழியைக் காட்டுகிறார் திரு. நா. மகேசன் அவர்கள். தனது கற்பனைத் திறத்தால் ஒவ்வொரு ஆத்திசூடி வாக்கியத்துக்கும், சிறந்த, அதிஉன்னதமான, தற்காலத்துக்கு ஒவ்வக்கூடிய கதைக் கருக்களை உருவாக்கி, சிறுவர் முதல் முதியோர்வரை படித்து இன்புறவும், பயன்பெறவும் தக்கமுறையில் இந்நூலை எழுதி உள்ளார் ஆசிரியர். இந்த அரிய நூலைத் தமிழ் கூறும் நல்லுலகம் ஆர்வத்தோடு வரவேற்று ஆதரவளிக்கக் கடமைப் பட்டுள்ளது.

—கலாநிதி அல்ஹாஜ் எம். எம். உவைஸ்.

● ஆத்திசூடி தந்த ஔவையைத் தமிழுலகம் என்றும் நினைவு கூர்ந்து போற்றுகிறது. அந்த நினைவு இளம் உள்ளங்களிலும் என்றும் நிலைக்க வைத்துவிட்டார் திரு. நா. மகேசன் அவர்கள். அருமையான படைப்பு. சின்னஞ்சிறிய கதை. ஆனால் பென்னம் பெரிய உண்மை. இதுவே நவீன காலத்துக்கு ஏற்புடைத்தாகும். நம் நாட்டுக்கலாச்சாரம் குன்றாதபடி நல்ல கருத்துக்களுடன் அமைந்த இக்கற்பனையூற்றுகளைப் போற்றுவோம்.

—சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

அச்சுப் பதிவு: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம் - நாவலப்பிட்டி.